# சிமெந்துத் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம்


Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தாபல் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 73
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 12 ஏப்ரல் 18 சனிக்கிழமை [25-4-70]



உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றேட்,
யாழ்ப்பாணம்

போன்: 7119 தந்தி: வைரம்



கேட்டு வாங்குங்கள்

சங்கு மார்க்

பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டுபக்கமும் தறையப்பட்டது
கிடைக்குமிடம்:

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130


## 9000 தொழிலாளர் வெளிநடப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் நேற்றுமுதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒரு காவலாளியைத் தவிர்ந்த சுமார் 900 ஊழியர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

26 கோரிக்கைகளை முன்வைத்து பொதுத் தொழிலாளர் யூனியனும் வர்த்தக ஊழியர் சங்கமும் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

பெப்ருவரி மாதம் 23-ம் திகதி நடைபெற்ற அடையாள வேலைநிறுத்தத்தின் போது அனுபவமில்லாத ஊழியர்களை வேலைக்கமர்த்தி இயந்திரங்களைப் பழுதடையச் செய்தது சம்பந்தமாக விசாரணை நடத்தும்படி கோரியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால் இதுபற்று விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை தொடக்கம் தொழிற்சாலை வெறிச்சோடிக் கிடந்தது. அங்கு எவ்வித வேலையும் நடைபெறவில்லை. வேலைநிறுத்தக்காரர் சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் தொழிற்சாலை முன்றலில் கோஷங்களை எழுப்பியபடியிருந்தனர்.

வேலைநிறுத்தம் நடைபெறும் இடத்துகு நேரில் விஜயம் செய்த காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு ஜோக்கீம் அமைதியை நிலைநாட்டும்படி வேலைநிறுத்தக்காரரிடம் கேட்டுக் கொண்டார். தொழிற்சலை பிரதான வாசலில் ஆயுதந் தாங்கிய பொலிசார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# பொலிஸ் இராணுவ அதிகாரிகள் புரட்சிக் குழுவுடன் தொடர்பு

## வட பகுதியிலும் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கத்திற்கு எதிராக இயங்கி வருவதாகக் கூறப்படும் புரட்சிக் குழுவில், சுமார் 3000 இளம் வாலிபர்கள் இயங்கி வருவதாகவும் இப்புரட்சிக்குழுவுடன் வட மாகாணத்தில் உள்ள சில பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கும் சில இராணுவத்தினருக்கும் இடையே தொடர்பு இருந்துவருவதாகவும் இரகசியப் பொலிசாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சில பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கண்காணிக்கப்பட்டு வருவதோடு ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இப்புரட்சிக் குழுவில் 20 வயதிற்கும், 25 வயதிற்கும் உட்பட்ட வாலிபர்களே பெருமளவில் இருப்பதாகவும், இவர்கள், உடைகளை திடீர், திடீரென மாற்றுவதாகவும், விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இக் குழுவுடன் தொடர்பு கொண்டிருந்ததாக கூறப்ப[illegible] கிழக்கு மகாணத்தை சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் இவ்வியக்கம் தென் பகுதியில் பல இடங்களில் [illegible] பித்து [illegible] வருகிறது.

[illegible] டுள்ளன.

புரட்சிக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் புகைக்கக்கூடாதென்றும் மதுபானம் அருந்தக் கூடாதென்றும் பணிக்கப்பட்டிருப்பதாகவும் விசாரணையிலிருந்து [illegible]ரிய வந்துள்ளது.

இந்த இயக்கத்தில் பெரும [illegible] ற பட்டதா[illegible] ம்வகித்து வருவதாகவும் இக்குழுவி[illegible] தங்[illegible]

இப்புரட்சிக் குழுவிற்கு பயிற்சி வகுப்புகளை நடாத்தும் பேச்சாளர்கள் மறுதினமே மறைந்து விடுகிறார்களென்றும் இக்குழுவினர் செருப்புக்களையே அணிந்து வருவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வடமாகாணத்தில் இப்புரட்சி இயக்கத்தினர் குழுவாக இயங்கவில்லையென்றும் சில தொடர்புகளை மட்டுமே ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. வடமாகாணத்தில் வவுனியா பகுதியில் இப்புரட்சிக் குழுவினர் இருக்கலாம் என பொலிஸார் கருதுவதால் இங்கு கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் பொலிஸ் நிலையங்களில் பொலிஸார் அதிகரிக்கப்பட்டிருப்ப[illegible] நிலையில் இருந்து வருவதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



## முதல் வெற்றி முழு வெற்றி!

கொழும்பு, வெள்ளி

வெலிமடையில் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருப்பதொன்றே அடுத்த தேர்தலில் எங்கள் கட்சி மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றியீட்டுமென்பதற்கு அறிகுறியாகவும் சுப சகுணமாகவும் இருக்கிறது.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகா பொரலஸ்கமுவயில் ஒரு வைபத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின் திருமதி சிறிமா பண்டாரநாயகா கலந்துகொண்ட முதல் வைபவம் இதுதான்

## 52 தொகுதிகளில் நேரடிப் போட்டி

## தமிழ் மக்களே ஆதரியுங்கள்

### ஸ்ரீ.ல.சு.க. வேட்பாளர் வேண்டுகோள்

அனுராதபுரம், வெள்ளி

'சிங்கள-முஸ்லிம் தமிழ் மக்கள் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் மிகுந்த இன்னல்களுக்குள்ளாகியுள்ளனர். இந்த இன்னல்களைக் களைய வேண்டுமானால் சகல இனத்தவரும் வேறுபாடின்றி இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குத் தங்கள் வாக்குகளை அளிக்கவேண்டும்'

இவ்வாறு அனுரதபுரமுன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கே பி ரத்திநயக்கா அனுரதபுரியில்தேர்தல் வேட்பாளர் மனுவைத் தாக்கல்செய்தபின்னர் அனுரதபுரிக் கச்சேரிக்குமுன் தமிழில் பேசும்போது குறிப்பிட்டார்.

## வெற்றி நிச்சயம்

ஊரதீவு, வியாழன்

எனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நான் கடந்த காலத்தில் நடந்துள்ளேன். தேர்தல் காலத்தில் நான் மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை மீறமல் [illegible]

பெற்ற கூட்டமொன்றில் திரு. நவரத்தினம் பேசினார்.

புங்குடுதீவு கிராமசபை உறுப்பினர் திரு. வே. சி. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 52 தொகுதிகளில் நேரடிப் போட்டி

கொழும்பு, வெள்ளி

எதிர்வரும் 1970 பொதுத்தேர்தலில் 52 இடங்களில் நேரடிப் போட்டி நடைபெறுகின்றது.

கைத்தொழில் அமைச்சர் பிலிப் குணவர்த்தனுவுக்கும் ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சிக்குமிடையில் அவிசாவளையில் நேரடிப் போட்டி நடைபெறுகிறது. இம்முறை தொழில் அமைச்சர் மொகமகூவை நேரடியாக எதிர்க்க லங்காசமசமாஜக்கட்சி, திருமதி குசலா அபயவர்த்தனவை நிறுத்தியிருக்கிறது. திருமதி குசலா அபயவர்த்தன வெளிநாடுகளில் இருந்தார். தேர்தலுக்காக அவர் அவசர அவசரமாக இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார். திருமதி குசலா சென்றதேர்தலில் மொறட்டுவ தொகுதியில் திரு ரஸ்டின் பெர்னண்டோவை எதிர்த்துப் போட்டியிட்டு 2039 வாக்குகளால்தோல்வியுற்றார்.

**அமைச்சர்களை எதிர்த்து**

பொதுமராமத்து தபால் தந்திஅமைச்சர்திரு.மொண்டேகு ஜெயவிக்கிரமா சென்றமுறை போட்டியிட்ட வெலிகம தொகுதியைவிட்டு அப்புத்தளை தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் நேரடி போட்டியிடுகிறார்.

சமூக சேவை அமைச்சர் திரு அசோகா கருணரத்தினவிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவருக்கும் றம்புக்கனையில் நேரடிப் போட்டி நடைபெறுகிறது.

**கல்வி அமைச்சர்**

உதவிக்காணி அமைச்சர் கப்டன் செனவிரத்வன (மகியங்கன) ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிநேரடி எதிர்ப்பை எதிர்நோக்க கல்வி அமைச்சர் இரியகொலை குளியாப்பிட்டியில் சுதந்திரக்கட்சி வேட்பாளர் சமரசிங்காவுடன் நேரடியாக மோதுகிறார். திரு.சமரசிங்க சென்றமுறை தேர்தலில் போட்டியிட்டு 2813 வாக்குகளால் தோற்றார்.இதேதொகுதியில் 60-ம் ஆண்டு ஜூலையில் போட்டியிட்ட போது 45 வாக்குகளால் திரு. இரியகொலையை தோற்கடித்தார்

திரு சி பி டி. சில்வாவை எதிர்த்து திரு. ரத்ன தேசபிரிய சேனநாயக்காமின்னேரியாத்தொகுதியில் நேரடியாகப் போட்டியிடுகிறார்.



இவர் சென்ற தேர்தலில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவை எதிர்த்து போட்டியிட்டவர். நேரடிப் போட்டியில் 3429 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தவர்.

**எதிர்க்கட்சித் தலைவர்கள்**

திருமதி தமரகுமாரி இலங்கரத்ன கலகெதரவில் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்து நேரடியாகப் போட்டியிடுகிறார்.

திரு ரி பி. இலங்கரத்னவை எதிர்த்து திரு பிலிப் குணவர்த்தனவின் மனைவியான குசுமா கொலன்னவைத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் தொம்பேயில் நேரடிப் போட்டி நடக்கிறது.

**தளபதியும் சபாநாயகரும்**

முன்னைநாள் இராணுவத் தளபதியும், சதிவழக்கில் குற்றம்சாட்டப்பட்டு விடுதலையானவருமான திரு. ரிச்சாட் உடுகம, மாத்தளை தொகுதியில் முன்னாள் எம் பி அலிக் அலுவிகாராவை எதிர்த்து நேரடியாகமோதுகிறார்.

முன்னைநாள் சபா நாயகர் சிலாபத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து நேரடியாக சுதந்திர கசிட் போட்டியிடுகிறது.

பலாங்கொடை தொகுதியில் முன்னைநாள் செனட்டர் திருமதி சீதா செனிவரத்தின,அத்தொகுதி முன்னாள் எம் பி திருமதி ரத்வதையை எதிர்த்து போட்டியிடுகிறார்.

கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் டாக்டர் எஸ் ஏ.விக்கிரமசிங்கா, அக்குரசா தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியுடன் நேரடி போட்டியில் ஈடுபட்டுள்ளார். சென்ற முறைமுக்கோணப் போட்டியில் 2374 வாக்குகளால் இத்தொகுதியில் வெற்றிபெற்றார்.

**சமசமாஜ தலைவர்**

சமசமாஜ கட்சித்தலைவர் டாக்டர் என். எம் பெரேராவுக்கும். ஐக்கிய தேசிய கட்சியைச்சேர்ந்த ஜோர்ஜ் கொத்தலாவலைக்கும் எட்டியாந்தோட்டைத் தொகுதியில் நேரடிப் போட்டி நடைபெறுகிறது. திரு ஜோர்ச் கொத்தலாவலை டாக்டர் பெரேராவை எதிர்த்து 60ம் ஆண்டு ஜூலை தேர்தலில் போட்டியிட்டு 1115 வாக்குகளாலும், 65ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு 1595 வாக்குகளாலும் தோல்வியடைந்தவர். கலைக்கப்பட்ட ஆட்சிமன்றத்தில் இவர் பண்டாரகம தொகுதி உறுப்பினராக உப தேர்தலில் வெற்றி பெற்று வந்தவர்.



உதவி சமூகசேவையமைச்சர் திரு எஸ் டி ஜெயசிங்காவை எதிர்த்து பாணந்துறை முன்னாள் எம் பியும் சமசமாஜக்கட்சிப் பொதுச் செயலாளருமான திரு லெஸ்லி குணவர்த்தனவின் மனைவி திருமதி விவியன் நேரடியாகச் சமசமாஜக் கட்சி சார்பில் போட்டியிடுகிறார். திருமதி விவியன் சென்ற தேர்தலில், தொழிலமைச்சர் எம் எச் முகமதை எதிர்த்து பொரலை தொகுதியில் போட்டியிட்டு 1992 வாக்குகளால் தோற்றார்.

தமிழரசுக் கட்சி தலைவர் திரு. எஸ்.எம்.இராசமாணிக்கத்திற்கும், ஐக்கிய தேசி

(4-ம் பக்கம் பார்க்க)

பின் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் இவ்வியக்கம் தென்பகுதியில பல இடங்களில் குழுக்களை ஆரம்பித்து வருவதாகவும் தெரியவருகிறது.

பொலிஸ் நிலையங்களில் றிசேர்வ் பொலிஸின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுவந்த துப்பாக்கிகள் தற்பொழுது பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரியின் பாதுகாப்பில் தனி அறையில் வைக்கப்பட்

வந்துள்ளது.

இந்த இயக்கத்தில் பெருமளவில் வேலையற்ற பட்டதாரிகளும், அங்கம்வகித்து வருவதாகவும் இக்குழுவினர் தங்கள் செலவிற்காக சிறியளவில் திருட்டுகளை நடாத்தி வருவதாகவும் சில இடங்களில் இவர்கள் மக்களை பயமுறுத்தி வருவதாகவும் விசாரணையிலிருந்து மேலும்தெரியவந்துள்ளது.

நிலையங்களில் பொலிஸார் அதிகரிக்கப்பட்டிருப்பதோடு பொலிஸார் உஷார் நிலையில் இருந்து வருவதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு எதிராக குறிப்பாக மலை நாட்டுத்தமிழருக்கு எதிராகவே இந்த இயக்கம் நடைபெற்று வருவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நான் கடந்த காலத்தில் நடந்துள்ளேன். தேர்தல் காலத்தில் நான் மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை மீருமல் இனத்துக்காகஎன்னால்இயன்றதைச் செய்திருக்கிறேன். எனவே உண்மையே இறுதியில் வெல்லும் என்பதற்கிணங்க உண்மையைக் கடைப்பிடித்த எனக்கே எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றியுண்டு என நான் பூரணமாக நம்புகிறேன்'

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் கழகத்தின் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளருமான திரு. வி. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

புங்குடுதீவு கந்தசுவாமி கோயில் முன்றலில் நடை

திரு. நவரத்தினம் பேசினர்.

புங்குடுதீவு கிராம சபை உறுப்பினர் திரு. வே. சி. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்றது திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

அடையாள அட்டைச் சட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்த முனைகின்றபோது தமிழினம் நிச்சயமாக அதை எதிர்க்கவேண்டும். அமுல் நடத்துவதற்கு இடம் கொடுத்து அடையாள அட்டையை ஏற்போமாய்இருந்தால் அதைப்போன்ற இயம வேதனை வேறெதுவும் தமிழருக்கு இருக்கமுடியாது. இதற்குமுன்னோடியாக எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் தமிழினம் சரியான தீர்ப்பை வழங்கவேண்டும்.

# "இடதுசாரிகள் ஆட்சிக்குவந்தால் இனிமேல் பொதுத்தேர்தல் நடக்காது"

குருநாகல், சனி

தாங்கள் ஆடசிக்கு வந்தால் 'மக்கள் குழுக்களின்' உதவியுடன் அரசாங்கத்தை நடத்துவோமென ரி.பி, சுபசிங்கா, ஸ்ரான்லி திலகரத்தின போன்றவர்கள் அறிவித்தார்கள் இந்த மக்கள் குழு என்றால் என்ன? மக்கள் மீது பழிக்குப்பழி வாங்கி, அவர்களை அடிமைகள்போல வேலை செய்யத் தூண்டுவதுதான் என குருணாகலை ஐ. தே கட்சி அபேட்சகர் திரு. டி பி வெலிகெதரவை ஆதரித்து குருணாகலை பசாரில் நடந்த ஐக்கிய தேசியக்கட்சிக் கூட்டத்தில் செனட்டர் திரு கே எம் பி இராஜரத்தின குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், கூறியதாவது: இந்தத் தேர்தலில் இடதுசாரிகள் தெரிவுசெய்யப் படுவார்களானால், எதிர்காலத்தில் பொதுத்தேர்தல்களே நடைபெறாது. ஆகவே, மக்கள் தங்கள் வாக்குகளை புத்தியாக பயன்படுத்த வேண்டும். உண்மையான சுதந்திரத்தை விரும்புகிற மக்கள் கூட்டணியினரை தெரிவு செய்வார்கள் என்று என்னால் நம்பமுடியாது. ஆகவே அடுத்த அரசாங்கம் 'டட்லி சேனநாயக்காவின் அரசாங்கமாகவே' இருக்கும். எல்லாத் தத்துவங்களுக்குள்ளும், பொதுவுடமைக் கொள்கைதான் மிகவும் ஆபத்தானது. காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா பொதுவுடமையையும், பொதுவுடமை வாதிகளையும் எதிர்த்தார் ஆனால் திருமதி பண்டாரநாயக்கா அவர்களோடு சேர்ந்து தன்னை ஏமாற்றிக் கொள்கிறார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. மரபுவழிகள் வழிமுறையாக வந்துகொண்டிருக்கின்றது. ஆகவே பெரும்பாண்மைக் கட்சியே அரசாங்கம் அமைக்கும். திருமதி பண்டாரநாயக்கா, கூட்டணியின் மற்றக் கட்சியினருக்குக் கையொப்பமிட்டுக் கடிதங்கள் கொடுத்ததிலிருந்தே அவரது கட்சி வெற்றி பெறுமா என்பதில் அவருக்கே சந்தேகம் இருக்கிறது. பொதுவுடமையின் கீழ் சந்தேகப்பட்டவர்கள் எவ்வித விசாரணையோ வழக்கோ இன்றி சுடப்படுவர். எமது அரசாங்கம் இந்த வகையில் நாடு செல்வதை விரும்பாது எனக் கூறிமுடித்தார்.

வண, பொபிட்டிய புன்னரத்தினதேரோ, டி. வி. வெலிதெர, ஏச் பி ஹெரத், திசத்முனசிங்கா ஆகியாரும் பேசினர்.

# லொறி புரண்டதில் சிறுவனும் தாயும் பலி

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலைக்குச் சமீபத்தில் பன்குளத்துக்கு அருகில் நேற்று மாலை ஒரு லொறி புரண்டதால் வீதியால் சென்றுகொண்டிருந்த 9 வயதுச் சிறுவனும் அவனது தாயும் லொறியின் கீழ் சிக்கி நசுங்குண்டு ஸ்தலத்திலேயே மாண்டார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் எண்ணெய் ஆலைக்குச் சொந்தமான அந்த லொறி சிறுவனையும் தாயையும் நசித்துக் கொன்றுவிட்டு பள்ளத்தில் விழுந்தது.

மீனாட்சி என்ற அந்தத் தாயும் சுந்தரமூர்த்தி என்ற அந்தச் சிறுவனும் மொறவா ஆஸ்பத்திரியில் மருந்தெடுத்துக்கொண்டு திரும்பி வருகையில் இந்த விபத்து நேர்ந்தது.

இவ்விபத்து சம்பந்தமாக உப்புவெளிப் பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

# இ. தொ. காங்கிரஸ் யூ.என்.பி.யை ஆதரிக்குமா?

கொழும்பு, வெள்ளி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும்தேர்தலில் ஐக்கிய தேசியகட்சி அபேட்சகர்களை ஆதரிக்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ்தலைவர் திரு. எஸ். தொண்டமான் வேண்டுகோள்விடத் தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

கத்தோலிக்க மக்களின் நலன் கருதி கத்தோலிக்க சோஷலிச கட்சியொன்றை உருவாக்க முயற்சி எடுத்து வந்தஒருவர் கொழும்புவடக்கில் சுயேட்சையாகப் போட்டியிடுகிறார்.

திரு. ஆர். ஜி. சேனநாயக்கா தம்பதேனியாவிலும் திருக்கோணமலையிலும் போட்டியிடுகிறார். ஐ. ஏ. எஸ் ஜயகம என்பவர் கொழும்புதெற்கு கொழும்புவடக்கு ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிடுகிறார்.

சுயேட்சையாகப் போட்டியிடும் தமிழர் சுயாட்சி கழகத்தினருக்கு சின்னமாக தராசு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழர் சுயாட்சிக்கழகத்தினர் ஊர்காவற்றுறை நல்லூர், கோப்பாய், பருத்தித்துறை ஆகிய நான்கு தொகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

காங்கேசன்துறையில்சுயேட்சையாகப் போட்டியிடும் ஈழத்தமிழர் விடுதலை முன்னணி தலைவர் திரு சி, சுந்தரலிங்கத்திற்கு சேவல் சின்னமாக கிடைத்திருக்கிறது. நல்லூரில் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. இ. தனபாலசிங்கத்திற்கும் ஊர்காவற்றுறையில் சுயேச்சையாகபோட்டியிடும் ப. கதிரவேலுவுக்கும் சேவல் சின்னமாகக் கிடைத்திருக்கிறது.

வட மாகாணத்தில் உள்ள தொகுதிகளில் ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளில் முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் இருவர் போட்டியிடுகின்றனர்.

பருத்தித்துறையில் இலங்கைதிராவிடமுன்னேற்றக்கழக சார்பில் போட்டியிடுபவருக்கு சேவலும், மட்டக்களப்பில் இலங்கை தி. மு. க. சார்பில் போட்டியிடுபவருக்கு தராசும் ஏகமனதாக கிடைத்திருக்கின்றன.

**தொகுதி மாற்றம்**

65-ம் ஆண்டு தேர்தலில் வவனியாவில் போட்டியிட்ட திரு. சி. சுந்தரலிங்கம் காங்கேசன்துறையிலும், கிளிநொச்சியில் போட்டியிட்ட திரு. வி. குமாரசாமி சாவகச்சேரியிலும், கிளிநொச்சியில் போட்டியிட்ட பண்டிதர் கா. பொ இரத்தினம் ஊர்காவற்றுறையிலும், வவனியாவில் போட்டியிட்ட திரு. எஸ், ஸ்ரீனிவாசன் நல்லூரிலும், காங்கேசன் துறையில போட்டியிட்ட திரு. வி. காராளசிங்கம் உடுவிலிலும் இம்முறை போட்டியிடுகிறார்கள்.

வடமாகாணத்தில் கடந்த தேர்தலில் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் காங்கேசன்துறையிலும், வவனியாவிலும் போட்டியிட்டனர். இம்முறை வடமாகாணத்தில் எவரும் சீன சார்பு கம்யூனிஸ்டகட்சிசார்பில் போட்டியிடவில்லை. கம்பஹா தொகுதியில் மட்டும் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு, எஸ். டி. பண்டாரநாயக்க போட்டியிடுகிறார்.

## புராதன மனிதனின் உடல்

மாஸ்கோ, ஏப்: 24

உடல் முழுவதும் தங்கத்தினால் போர்க்கப்பட்ட புராதன மனிதன்ஒருவனின் எலும்புக்கூட்டை சோவியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மத்திய ஆசியாவில் இந்தச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. கிறிஸ்துக்கு முன் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த மனிதனின் எலும்பாக இருக்கவேண்டும்என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

வெலோனு தொழிற்சாலையில் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. 30-ம் திகதிக்கு முன் நேரில் வந்து சந்திக்கவும். சைக்கிள் வைத்ருப்பது விரும்பத்தக்கது. நா. தருமலிங்கம். "வெலோனு தொழிற்சாலை", மெமோறியல் லேன், மானிப்பாய். 2066

தியேட்டர் ஒன்றிற்கு, உதவி மனேஜர் காஷியர், ஒரு புக்கிங்கிளாக் தேவை. பிணைப்பணம் உதவி மனேஜர் 2000/- காஷியர் 2000/- புக்கிங்கிளாக் 1500/-. 30-4-70க்கு முன் விண்ணப்பிக்கவும். ஆ. தணிகாசலம், ஆத்தியடி, பருத்தித்துறை. 2062

### விற்பனைக்கு

கிழக்குக் கோண்டாவில் சந்திக்கும், விவசாயப் பாடசாலைக்குமிடையில், பெனியன் கம்பனிக்கு அண்மையில் 131/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு வீடுகட்டவும், தொழிற்சாலை அமைக்கவும் வசதியான இடம். சகல வசதிகளுமுள்ள இடம் பங்கிட்டும் கொடுக்கப்படும். தொடர்புகொள்க: எம். குணரத்தினம், ஆசிரியர், கோண்டாவில் கிழக்கு. 2067

அரியாலை 52/3, ஆனந்தன்வடலி, 1-ம் ஒழுங்கை, 3 1/2 பரப்புக் காணி, பிரயோசனங்களுடன் த. மகாதேவா, தபாற்கந்தோர், யாழ்ப்பாணம். 2065

காணி

கைதடி வடக்கு. வேலவரையில் றேட்டுக்கரை குடியிருக்கக் கூடிய 17 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு ஆறுமுகம் சச்சிதானந்த சோதி, தொழில் அதிகாரி முதலியார் கனகசபை ஒழுங்கை மானிப்பாய். 2068

## ஆட்சிமன்றத்தில் கடமைகள்

மாவிட்டபுரம், வெள்ளி

கம்யூனிஸ்ட் கட்சி பயங்கரமான கட்சி கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் ஆட்சி மன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் தமிழர்களை அழித்துவிடுவார்கள்.

கட்டுவனில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினர் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்.

ஆட்சிமன்றத்திற்கு அனுப்பப்படும் பிரதிநிதிகளுக்கு இரு வித கடமைஉண்டு பாராளுமன்றத்தில் நல்ல முறையில் நடப்பதும் மக்களுக்கு சேவைசெய்வதுமே அவ்விரு கடமையாகும். அவ்விரு கடமைகளையும் நிறைவேற்றுபவனே மீண்டும் ஆட்சிமன்றத்திற்கு அனுப்பப்படுவான் என்று மேலும் பேசுகையில் குறிப்பிட்டார் திரு எஸ்.ஜே. வி.

உடுவில் வேட்பாளர் திரு: தர்மலிங்கம், வட்டுக்கோட்டை வேட்பாளர் அமிர்தலிங்கம் உட்படப் பலர்உரையாற்றினர்.

### ஏல விற்பனை

வில்லூன்றி றேட் வெள்ளாந்தெரு No 6 கு. செல்லையா அவர்களிடம் 4-1-68 முதல் 28-12-68-ம் திகதி முடிய அடவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் மேற்படி கடையில் 1970-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

C. இரகுநாதன்,
2244 ஏலவிற்பனையாளர்.

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள E. Y. தொடர் இலக்கமுள்ள மொறிஸ்மைனர்கார் உடன் விற்பனைக்குண்டு. 24, 25-ம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை நாலு மணி வரை பார்வையிடலாம். எக்ஸைசஸ் கந்தோர், பீச்றேட், யாழ்ப்பாணம். 2063

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் தங்கவேலு நடித்த
ஹரிச்சந்திரா

## கயிறிழுவைப் போட்டியில் கல்யாணமானவர் தோல்வி

இமையாணன், வெள்ளி

இமையாணன் சிவனடிச் சங்கத்தின் 47வது ஆண்டு விழாவை யொட்டி அன்றைய தினம் பகல் பிரம்மச்சாரிகளுக்கும் திருமணமானவர்களுக்குமிடையே நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியில் பிரம்ச்சாரிகள் கோஷ்டி 2 ஆட்டங்களிலும் கல்யாணமானவர்களைத் தோற்கடித்திருக்கிறது.

முதல்முறை ஆட்டத்தில் விட்டுக்கொடுக்காமல் நீண்டநேரம் பிரமச்சாரிகளுடன் போராடிப் பின் தோல்வியுற்ற மணமானவர்கள் குழு அடுத்த ஆட்டத்தில் ஆரம்பத்திலே பிரம்மச்சாரிகளுக்கு விட்டுக்கொடுத்துத் தோல்வியை ஒப்புக்கொண்டது. இன்னும் பல விளையாட்டு மோதல்களும் இவ்வரங்கில் இடம்பெற்றன.

இறுதியாக அன்றிரவு நடைபெற்ற விழாவில் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதோடு பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## 'தேங்காய்துருவுதல், கிடுகு பின்னுதல்களுக்கு பரிசு வேண்டும்'

பருத்தித்துறை, வெள்ளி

"விளையாட்டு மூலம் ஒழுக்கத்தைப் பேணமுடியும் அது மட்டுமன்றி, ஜனநாயகத்துக்கு அச்சாணியாக விளங்கும் விட்டுச்கொடுக்கும் மனப்பான்மையையும் உடலுறுதியையும் அளிப்பதும் விளையாட்டுகளே அக்காரணம்பற்றியே சில பதவிகளுக்கு விளையாட்டு வீரராக விளங்குபவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்."

இவ்வாறு நேற்றுமுன் தினம் கட்டைவேலி கிராம முன்னேற்றச்சங்க ஆதரவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடபகுதிக் கூட்டுறவு உதவு ஆணையாளர் திரு. ரி. கந்தசாமி கூறினர்.

தொடர்ந்து அவர் பேசுகையில், உள்ளூர் விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்றும் பெண்கள் சாதாரணமாக வீடுகளில் செய்யும் தேங்காய்துருவுதல், கிடுகுபின்னுதல் ஆகியனவும் விளையாட்டுப்போட்டியில் இடம்பெறுவதுவிரும்பத்தக்கது என்றும் கூறினர். திருமதி எஸ். கந்தசாமி பரிசில்கள் வழங்கினர்.

## "ச. ச. நிலையங்கள் ஒன்றுபட்டால் சகலதும் கிடைக்கும்"

இமையாணன், வெள்ளி

உடுப்பிட்டி கிராமச் சங்க சனசமூகநிலையங்களின் சமாஜம் ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்பப் பொதுக் கூட்டம் உடுப்பிட்டி கிராம சபை மண்டபத்தில் சனசமுக நிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இப்பகுதி சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சிப் பகுதியினராலும் ஏனைய பகுதியினராலும் புறக்கணிக்கப்படுவது பற்றியும் மற்றும் இவ்வூரில் பொதுவிளையாட்டு மைதானம் இல்லாதது, சனசமூக நிலையங்களுக்கான தபாற்கந்தோர் சேமிப்புப் புத்தகங்களிலிருந்து பணம் எடுப்பதில் உள்ள கஷ்டங்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கான பணம் கிடைக்காதது பற்றியும்சுட்டிககாட்டப்பட்டன.

"இக் குறைகள் யாவும் தீர்க்கப்பட வேண்டுமாயின் [...]

திரு. ரி. அருந்தவராசா, செயலாளர் திரு. தி யோகசாமி, துணைச்செயலாளர் திரு. எஸ். அருளானந்தம், பொருளாளர் திரு. சி. சிவநேசன் ஆறுபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## "பிரச்னை இதுதான்"

மல்லாவி, வியாழன்

யார் ஆட்சிக்கு வருகின்றுர்கள் என்பதல்ல பிரச்னை எவர் உரிமைகளைத் தருகின்றுர்கள் என்பதே எமது பிரச்னை'

இவ்வாறு கிளிநொச்சி வட்டக்கச்சியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தமிழரசுக் கட்சி கிளிநொச்சி வேட்பாளர் திரு மு. ஆலாலசுந்தரம் கூறினர்.

திரு க. [...] தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஆலால [...]

# தேர்தல் சட்டம் கூறுவது என்ன?

1946ம் ஆண்டு இயற்றப்பட்ட இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்) பிரகடனத்திற்கு, ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் வெகுவான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னும் இந்தத் தேர்தல் சட்டத்தில் பாரதூரமான பல புதிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன; 1970 ஆண்டுத் தேர்தலில் இவை அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

வாக்காளர்களும், பொதுமக்களும், வேட்பாளர்களும், தேர்தல் சட்டம் என்ன கூறுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியது மிக மிக அவசியம்.

எனவே இன்றிலிருந்து, 'ஈழநாடு' வாசகர்களுக்கென ஒவ்வொரு நாளும் தேர்தல் திருத்தச் சட்டத்தில் முக்கியமான பிரிவுகளை அளிக்கிறோம்.

வாக்களிப்பு நிலையத்திலிருந்து கால்மைலுக்குட்பட்டஎல்லைக்குள் தடைசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்:

புதிய தேர்தல் திருத்தச் சட்டத்தின் 52-ம் பிரிவு (1ஏ) பிரிவின்படி, வாக்களிப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு நடைபெறும் எந்த நாளிலும், வாக்களிப்பு நிலையத்தின் நுழைவாயிலிலிருந்து கால் மைலுக்குட்பட்ட எல்லைக்குள் கீழ்க்காணும் எந்தச் செயலையும், யாரும் செய்யக் கூடாது:

(அ) வாக்குகளுக்காகப் பிரசாரம் செய்தல்:

(ஆ) எந்தவாக்காளனின் வாக்கையும் கேட்டல்.

(இ) எந்தக்குறிப்பிட்ட வேட்பாளருக்கும் வாக்களிக்க வேண்டாமென, எந்த வாக்காளரையும் தூண்டுதல்

(ஈ) உத்தியோக பூர்வமான அரசாங்கத் துண்டுப் பிரசுரங்கள் தவிர்ந்த வேறு எந்தத் துண்டுப் பிரசுரங்கள், சுலோக அட்டைகள், இன்னபிறவற்றையும் இச் சட்டத்தின் 35ம் பிரிவின்படி வேட்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட சின்னங்களையும்விநியோகிக்கவோ காட்சிக்கு வைக்கவோ கூடாது.

சட்டத்தின் இந்த உபபிரிவை மீறுவோர் தண்டனைக்குரிய குற்றத்தை இழைத்தவர்கள் ஆவார்கள். இதற்காக, மாஜிஸ்டிரேட் முன்னிலையிலான வழக்கு விசாரணையின் பின்னர் நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதமோ அல்லது ஒருமாதத்திற்கு மேற்படாத கடூழிய அல்லது சாதாரண சிறைத்தண்டனையோ, அபராதமும் சிறைத்தண்டனையுமோ [...]

### ஒலிபெருக்கிக்குத் தடை உண்டு

(1 பி) எந்த வாக்களிப்பு நிலையத்திலும், வாக்கெடுப்பு நடைபெறும் எந்த நாளிலும் யாரும்,

(அ) வாக்களிப்பு நிலையத்தினுள்ளேயோ, அதன் நுழைவாயிலிலோ அதற்கு அண்மையில் உள்ள எந்தத் தனியார், பொது இடங்களிலோ மனிதக் குரலைப் பரப்பும் அல்லது பெருக்கும் ஒலிபெருக்கி உட்பட்ட எந்தச்சாதனங்களையும், உபயோகித்தும்,

(ஆ) வாக்களிப்பு நிலையத்தினுள்ளேயோ, அதன் நுழைவாயிலிலோ, அதற்கு அண்மையிலுள்ள தனியார். பொது இடங்களிலோ, சத்தமிடவோ, வேறு எந்தவகையிலும் ஒழுங்கீனமின்றி நடந்தும்.

வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்களிப்பதற்காக வரும் எந்த நபருக்கும், எரிச்சலையூட்டக்கூடிய வகையிலோ, வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறுகவோ நடந்துகொள்ளக் கூடாது.

இந்த உபபிரிவை மீறுவோர், 100 ரூபாய் அபராதம் அல்லது ஒருமாதக் கடூழிய அல்லது சாதாரண சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கக்கூடிய குற்றத்தைச் செய்தவர்கள் ஆவார்கள்.

(நாளை ஊர்வலங்களுக்குத் தடை பற்றிய சட்ட விளக்கம் இடம் பெறும்.)

அரசாங்கத்துடன்

## சேர்ந்துழைத்தால்தான் சேவை செய்யமுடியுமா?

### நவரத்தினம் கேள்வி

மண்டைதீவு, வெள்ளி

சேவைசெய்வதற்கு வேடம் போடத் தேவையில்லை-காக்காய் பிடிக்கத் தேவையில்லை பதவிபெறத் தேவையில்லை ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தில் சேர்ந்து உழைத்தால்தான் தொகுதிக்கு சேவை செய்யலாம் என்று சிலர் தப்புக் கணக்குப் போடுகிறுர்கள். என்னைப்பொறுத்தவரையில் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எனது தொகுதிக்கு பலசேவைகளைச் செய்துள்ளேன். ஆட்சியில் பதவி பெறுவதால் நாம் இனத்துக்குச் சேவை செய்யமுடியாது நேர்மையுடனும் நீதியுடனும் [...] டிய இடத்தில் எதிர்த்தேயாக வேண்டும். இதே நேரத்தில் தமது தொகுதிகளுக்குச் செய்ய வேண்டிய சேவைகளையும் செய்யவேண்டும் என்றுர்.

கிராமமுன்னேற்றச் சங்க துணைச் செயலாளர் திரு. க, வில்வரத்தினம், திரு. செ, மகாலிங்கம், மறுமலர்ச்சி இயக்கச் செயளாலர் திரு சி. பாலசிங்கம், திரு. கை. பேரின்பநாதன். திரு. வீ. மாணிக்கவாசகர் உட்படப் பலர் உரையாற்றினர், வரவேற்புப்பத்திரதை தலைவர் திரு. அ. சி. குமாரலிங்கம் திரு. நவரத்தினத்திற்கு வழங்கினர்.

## 'வயது போனுலும் வீரம்போகவில்லை'

— ஜி. ஜி.

கொழும்புத்துறை, வெள்ளி

"என்னை எல்லோரும் வயதுபோன ஒரு கிழவன் என்று ஏளனமாக பேசுகிறுர்கள். ஆனல் எனக்கு வயது போய்விட்டது என்பது உண்மைதான். எனக்கு வயது போனுலும் வீரம்போகவில்லை" இவ்வாறு கூறினர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

த. கனகசபை தலைமையில் கொழும்புத்துறையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே திரு. ஜி. ஜி பொன்னம்பலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சாவகச்சேரி வவனியா தொகுதிகளின் காங்கிரஸ் வேட்பாளர்கள் உட்படப் பலர் உரையாற்றினர்.

நெல்லியடியில்

## நேநீர்க்கடைப் பிரவேசம்

புலோலி, வெள்ளி

நெல்லியடியில் அண்மையில் சிறுபான்மை மக்களின் தேநீர்கடைப் பிரவேசம் நடைபெற்றது.

இவ்வளவு காலமும் இவர்களுக்கு வெளியில் வைத்தே தேநீர்சாப்பாடுகள் வழங்கப்பட்டு வந்தன.

அண்மையில் இவர்கள் மற்றைய உயர்ந்த சாதியினருக்கு சமமாக தங்களுக்கும் உள்ளேவைத்து, தேநீர், சாப்பாடுகள் வழங்கவேண்டுமென்று கோரி இறுதியில் தேநீர் கடைகளுக்குள் புகுந்து தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டனர்

ஒருகடையில் இவர்கள் புகுந்தபொழுது சிறுசச்சரவு ஏற்பட்டு நெல்லியடி பொலிஸ் நிலையம்வரைசென்றுள்ளது.

இச்சச்சரவு காரணமாக சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தஒருவருக்கும், தேநீர் கடை சொந்தக்காரருக்கும் எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## நால்வரே போட்டி

யாழ்ப்பாணம். சனி

ஊர்காவற்றுறையில் சுயேச்சை அபேட்சகராக திரு. வி. நடராசா போட்டியிடவில்லை. இத்தொகுதியில் பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. வி. நவரத்தினம், திரு. என். ரி. சிவஞானம், திரு. வி. கதிரவேலு ஆகிய நால்வர் மட்டுமே போட்டியிடுகின்றனர் திரு. நடராசாகட்டுப்பணம் செலுத்தியிருந்தா ராயினும் [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி 3 காட்சிகள் நடித்த

# ஹரிச்சந்திரா

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி நடித்த


# திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த

# தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

இன்று மட்டும்
## கெப்பிட்டல்
(கொழும்பு)
மகத்தான 72-வது தினம்
## வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



## சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும்பலர் நடித்த
# தில்லானா மோகனம்பாள்

நாளை முதல்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
திரைகளில்
சினிமா ரசிகர்கள் வெகு ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த மற்றுமோர்
வெற்றிச் சித்திரம்
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நடித்த
# நம் நாடு


களிலிருந்து பணம் எடுப்பதில் உள்ள கஷ்டங்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கான பணம் கிடைக்காதது பற்றியும்சுட்டிககாட்டப்பட்டன.

''இக் குறைகள் யாவும் தீர்க்கப்பட வேண்டுமாயின் சனசமூக நிலையங்கள் யாவும் ஒரு கட்டுக் கோப்புக்குள் வரவேண்டும் என்றும் அதன் மூலம் மேலிடங்களுடன் தொடர்புகொண்டு கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வது சுலபம்'' என்றும் தலைவர் திரு. கிருஷ்ணசாமி கூறினார்.

புதிய உத்தியோகஸ்தர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. வி. திருநாவுக்கரசு, துணைத் தலைவர்

## காலியில் விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை, வெள்ளி

அகில இலங்கைக் கனிஷ்ட பிரிவுப் பாடசாலைகளுக்கான விளையாட்டுப்போட்டி மே மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் காலி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இப்போட்டியில் வடபகுதியிலிருந்து பல பாடசாலைகள் கலந்து கொள்ளவிருக்கின்றன.


## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
### அன்பே வா
(ஈஸ்மன் கலர்)

## MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m
Prepoya, Poya 4 shows
STEVE MCQUEEN AS
BULLITT
(Techni color)

## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30
THE SHUTTERED ROOM
(adults only)

## REGAL JAFFNA
Daily 10-30, a.m.
4-45, 7 & 9-45 p.m.
Anthony Quinn,
Anjanette Comer
in
GUNS FOR SAN
SEBASTIAN
ஒவ்வொரு கத்தோலிக்க
மக்களும் கட்டாயம்
பார்க்க வேண்டிய படம்


கட்சி கிளிநொச்சி வேட்பாளர் திரு மு ஆலாலசுந்தரம் கூறினார்.

திரு க. சின்னத்தம்பி த[illegible]மையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், தமிழர் தன்மானத்தை இழந்துவிடவில்லை என்பதை உலகமறியச்செய்ய வேண்டுமானல், தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களைத் தெரிவுசெய்து ஆட்சிமன்றம் அனுப்பி வைக்கவேண்டும் என்றார் மற்றும் பலர் பேசினர்.

## அறப்பணியும் தமிழனும்

யாழ்ப்பாணம், வெள்ளி

''அறப்பணியாற்றவேதமிழன் பிறந்தான் என்பதைச் சித்தரிப்பதுதான் சித்திரா பூரணை'' என சித்திரா பூரணையன்று காலை குசவமடத்தடி தெய்வகோவிலில் பௌர்ணமிக் கஞ்சி, அன்னதானம் இவற்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய சாவகச்சேரி நகரசபைஉறுப்பினர் திரு. பிள்ளையினார் தம்பிப்பிள்ளை கூறினார்.

இவ்வாலயத்தில் சுமார் முன்னூற்றைம்பது ஆண்டுகளாக சித்திரைக்கதை படிக்கப்பட்டு மகேஸ்வரபூசை நடைபெற்று வருவதாகவும் சித்திரைக்கதை பாவகாரியங்களிலிருந்து மனிதன் விலகி நடக்க உதவுவதாகவும் அவர் சொன்னார்.

ஆசிரியர் அ. நாகராசா தலைமையில் சித்திரைக்கதை படிக்கப்பட்டது.

னா நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதமோ அல்லது ஒருமாதத்திற்கு மேற்படாத கடுழிய அல்லது சாதாரண சிறைத்தண்டனையோ, அபராத[illegible]ம் சிறைத்தண்டனையுமோ விதித்துத் தண்டிக்கப்படலாம்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### சனி 25—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, -30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

கொண்டு எனது தொகுதிக்கு பலசேவைகளைச் செய்துள்ளேன். ஆட்சியில் பதவி பெறுவதால் நாம் இனத்துக்குச் சேவை செய்யமுடியாது நேர்மையுடனும் நீதியுடனும் நடந்தால் நாம் எந்த ஆட்சியாளருக்கும் அடிபணியவோ தலைசாயவோ தேவையில்லை.


இவ்வாறு நேற்றுமுன் தினம் மாலை மண்டைதீவு கிழக்குக் கிராமமுன்னேற்றச் சங்கத்தினால் தமக்களிக்கப்பட்ட பொது வரவேற்பில் கலந்து கொண்ட தீவுப் பகுதியின் முன்னாள் எம். பி, யும் தமிழர் சுயாட்சிக்கழக தலைவருமான திரு. வ. நவரத்தினம் குறிப்பிட்டார்.

கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. அ. சி. குமாரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில்:-

தமிழ்ப்பிரதிநிதிகளைப் பொறுத்தவரையில் ஆட்சி மன்றத்தில் இரண்டுகடமைகள் செய்யவேண்டும். ஒன்று இனத்தைக் காப்பதற்காக, இனத்திற்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பதற்காகப் பாடுபடவேண்டும், இதற்கு அரசாங்கத்தை எதிர்க்க வேண்

மாணிக்கவாசகர் உட்படப் பலர் உரையாற்றினர், வரவேற்புப்பத்திரதை தலைவர் திரு. அ. சி. குமாரலிங்கம் திரு. நவரத்தினத்திற்கு வழங்கினார்.

தினம், திரு. என். ரி சிவஞானம், திரு. வி. கதிரவேலு ஆகிய நால்வர் மட்டுமே போட்டியிடுகின்றனர் திரு. நடராசாகட்டுப்பணம் செலுத்தியிருந்தா ராயினும் நியமனப்பத்திரத்தைத்தாக்கல்செய்யவில்லை.



நவாலியூர் அஷ்டகிரி கந்தசாமிகோவில், வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ வரதராஜப்பெருமாள் கோவில் பிரதம குரு பிரதிஷ்ட சிரோமணி பிரம்மஸ்ரீ சுவாமி விஸ்வநாதக்குருக்கள் சிங்கப்பூர் ஸ்ரீ செண்பகவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்திவிட்டு கொழும்பு ஸ்ரீ முத்துவிநாயகர் மகோற்சவத்தையும் முடித்துக் கொண்டு விமானத்தில் பலாலியில் வந்து இறங்கியபொழுது பிரம்மஸ்ரீ ரி. கே சீதாராமசாஸ்திரிகள் ஆசிகூற வடபகுதி பொலிஸ்அதிபர் ஆர். சுந்தரலிங்கம், நவாலியூர்வாசிகள், பெருமாள் கோயில் தர்மகாத்தாக்கள் அனைவரும் மலர்மாலை சூட்டி குருவை வரவேற்றபொழுது எடுக்கப்பட்ட படம்.





# விங்க் மை போட்டி

பரிசுக்குரிய எண்கள் தெரிவுசெய்தல்
19—5—70
செவ்வாய்க்கிழமைக்கு பின்போடப்பட்டுள்ளது.

வெள்ளிம்பதி,
அளவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கம்யூனிஸ்ட்டு களிடமிருந்து

# கைப்பற்றிய ரஷ்ய ஆயுதங்களை கம்போடியாவுக்கு தென்வியட்னும் கொடுக்கிறது

நியுயோர்க், ஏப். 24
கம்போடியாவுக்கு தென்வியட்னும் ரஷ்ய ஆயுதங்களைப் பெருவாரியாக கொடுத்துவருகின்றது.

வியட்னும் சண்டையில் வடவியட்னும் துருப்புக்களிடமிருந்து தென்வியட்னுமியர் கைப்பற்றிய ஆயுதங்கள் இவை

வடவியட்னுமியரிடம் இருந்து கைப்பறிய ரஷ்ய ஆயுதங்களை கம்போடியாவுக்கு தென்வியட்னும் அரசாங்கம் கொடுப்பதை அமெரிக்கா அனுமதித்திருக்கின்றது. இந்த ஆயுதங்களில் தன்னியக்கமாக செயல்படும் யந்திரத் துப்பாக்கிகளே அதிகமிருப்பதாகத் தெரிகின்றது. கம்போடிய தலைநகரை நோக்கி வடவியட்னும் படைகளும் வியட்காங்கியரும் கடுமையான தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருப்பதால் இந்த ஆயுதங்கள் கம்போடியாவுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

கம்போடியாமீது வடவியட்னுமியரும் வியட்னுமியரும் கடுமையான தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருப்பதால் நிலைமையைச் சமாளிக்க வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை கம்போடியாவின் புதிய அரசாங்கம் கோரியிருந்தது.

இப்பொழுது தென்வியட்னுமிடமிருந்து கம்போடியாவுக்கு வழங்கப்படும் ஆயுதங்கள் அமெரிக்காவிடமிருந்து கம்போடியா கோரிய உதவியைப் பூர்த்தி செய்வதாகக்கொள்ள முடியாது என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் வியட்காங்கியரிடம் விழ்ச்சியுற்றிருந்த அதிமுக்கிய கிராமமொன்றை கம்போடிய துருப்புகள்மீண்டும்எதிர்ப்பு எதுவுமின்றி கைப்பற்றிவிட்டதாகச்செய்திகள் கூறுகின்றன. இன்னெருமுனையில் நாம்பென்னை நோக்கி சுமார் 40 ஆயிரம் கம்யூனிஸ்ட் படைகள் முன்னேறிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்க செனட்சபையின் வெளிநாட்டு குழுவின் இருவர் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்று நாம்பென்னுக்குப் புறப்பட்டுள்ளது. அங்குள்ளநிலைமைகளை நேரில் தெரிந்துகொள்ளவே இந்தத் தூதுக்குழு போகவதாகக் கூறப்படுகின்றது.

......

## ஆஸ்பத்திரியில் கருணாநிதி



சென்னை, ஏப் 24
தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். கண் சிகிச்சைக்காகவும் வைத்தியப் பரிசோதனைக்காகவும் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. கருணாநிதி ஒரு வார காலம் ஆஸ்பத்திரியில் இருப்பார் எனத் தெரிகின்றது.

கென்னடியை

## கொலைசெய்தவன் தங்கியிருந்த மாளிகை

நியூயோர்க், ஏப் 24
முன்னாள் அமெரிக்க ஜனதிபதி ஜோன் எவ். கென்னடியைக் கொலைசெய்யும் போது லீ ஹார்வி ஒஸ்வால்ட் தங்கி நின்றகட்டிடம் ஏலத்திற்கு விடப்பட்டது. டெனிசி மாகாணத்தில் இக்கட்டிடம் அமைந்திருப்பது தெரிந்ததே.

இக்கட்டிடத்தை நார்வில் என்னும் இடத்தைச் சேர்ந்த திரு. ஆப்ரே-மெஹியூ என்பவர் 650000 டொலருக்கு [ஏறக்குறைய 45.[illegible]00 ரூபா] ஏலத்தில் வாங்கினார்.

தற்போது திரு. மெஹியூ கென்னடியின் ஞாபகச் சின்னங்களைச் [illegible] கின்[illegible]ர். [illegible] வா[illegible]யளன்பின் கூறியதா[illegible]

## நடிகை டெய்ஸிராணி கைதாகி விடுதலை

அகமதாபாத், ஏப்ரல் 25
டெய்ஸி ராணி என்ற சினிமா நடிகை கைதுசெய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டிருக்கிறார்.

இவர் சிறுமியாக இருந்தபோது பல தமிழ்ப் படங்களில் நடித்துப் பெயர் வாங்கியிருக்கிறார். 'யார் பையன்' என்ற படத்தில் சிறுவனாக நடித்து. இவர் பெரும் புகழ்பெற்றிருந்தார்

பெரிய பெண்ணாக வந்த பின்னர் டெய்ஸி ராணி பல இந்திப் படங்களிலும் பிரமாதமாக நடித்திருக்கின்றார்.

குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத் நகரில் நடன நிகழ்ச்சி ஒன்றுக்கு ஒப்புக்கொண்டு பணம் வாங்கியபின்னர் ஒப்பந்தப்படி நடனம்ஆடவில்லையென்றுஇவர் மீது வழக்குத் தொடரப்பட்டது அவரைக்கைதுசெய்யும் படி கோர்ட்டில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் பொலிஸார் டெய்ஸி ராணியையும், அவருடைய தயாரையும் கைதுசெய்து பிணையில் விடுதலைசெய்தனர்.

## வைஜந்திமாலாவுக்கு எலிசபெத் ராணி அழைப்பு

சென்னை, ஏப்: 24
நாட்டிய நடிகை வைஜயந்தி மாலாவுக்கு எலிஸபெத் மகாராணி அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஜூன் மாதம் 14-ம் திகதி உலகப் பிரமுகர்களுக்கு இங்கிலாந்து ராணி விருந்து கொடுக்கிறார். இந்த விருந்தில் கலந்து கொள்ளும்படி நடிகை வைஜயந்தியாலாவுக்கும் அவரது கணவருக்கும் ராணி அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்தத் தகவலை நடிகை வைஜயந்திமாலா அண்மையில் திருப்பதிக்கு போயிருந்தபோது நிருபர்களிடம் கூறினார் மீண்டும் வெளிநாடுகளில் ஒருமாத காலம் கணவருடன் சுற்றுப் பிரயாணம் மேற்கொள்ளவிருப்பதாகக்கூறினார்திருமதி வைஜயந்திமாலா.

லண்டனில் பிரசித்திபெற்ற சார்லிவ்வேல்ஸ் தியேட்டரில் நடன நிகழ்ச்சி இடம்பெற விருப்பதாகவும் இதற்கு அங்குள்ள இந்தியத் தூதுவர் தலைமை வகிப்பார் என்றும் திருமதி வைஜயந்திமாலா கூறினார்.

பர்மிங்காம், மான்செஸ்டர், ஜெர்மனி, பெய்ரூட், அரேபிய வளைகுடா [illegible] இடங்களிலும் தமது ந[illegible]ன நிகழ்ச்சிகள் இடம் பெற [illegible] அவர் மேலும் [illegible]

## விவசாயிகளுக்கு கடனுதவி

தாவடி, வெள்ளி
விவசாய உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமாக தாவடியிலுள்ள விவசாயிகளுக்கு தாவடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அரசாங்க உதவியுடன் பணஉதவி அளித்துவருகிறது.

## யானைகள் தொல்லை

விஸ்வமடு. வெள்ளி
விஸ்வமடு உடையார் கட்டுக்கருகில் நேற்றுப் பட்டப் பகலில் யானைகளின் சேட்டை இடம்பெற்றுள்ளதாம். உடையார் கட்டில் கடமையில் ஈடுபட்டிருந்த விவசாயப்படை வீரர்களை ஏற்றிவருவதற்குச் சென்ற விவசாயப்படை வாகனசாரதிகள் நான்கு பேரை பவளக்கொம்பன் யானைகள் மடக்கிப் பயமுறுத்தியதாகவும், ஆனல் வாகன பிரதம சாரதி வை. எலியாஸ் அவர்களின் சாதுரியத்தால் வாகனத்தை வெட்டி திருப்பித் தப்பிவந்ததாகவும் கூறப்படுகிறது. வை. எலியாஸ், சுப்பிரமணியம், மகேந்திரம், கிருஷ்ணபிள்ளை ஆகியோரே நான்கு சாரதிகளுமாவர்.

## கேரள முதல்வர்

## மனச்சாட்சியின் கட்டளைப்படி தேர்தலில் போட்டியிட்டேன்

### கிரி தொடர்ந்து சாட்சியம்

புதுடில்லி, ஏப். 24
''நான் எனதுமனச்சாட்சியின் கட்டளைப்படி நான் ஜனதிபதி தேர்தலில் போட்டியிட்டேன் பாராளுமன்ற அங்கத்தவர், மந்திரிமார் ஆகியோரில் எனது ஆதரவாளர் யார் என்பதை நான் அறிந்து கொள்ளமுற்படவில்லை. திருமதி இந்திரா காந்தி சுதந்திர வாக்கை ஆதரிக்கின்றார் என்பதை அறிந்தபின்கூட நான் அவரைச் சந்திக்க முயற்சிக்கவில்லை'' இவ்வாறு தேர்தல் ஆட்சேப மனு விசாரணையில் ஜனதிபதி வி. வி. கிரி சாட்சியமளிக்கையில் கூறினர். பெருந்தொகையான மக்கள் விசாரணையைப் பார்க்க கோர்ட்டுக்கு வந்திருந்தனர்.

திருமதி இந்திராகாந்தி, மந்திரிசபை அங்கத்தவர்கள் கட்சியின் தீவிரவாதிகள் ஆகியோரின் உதவியுடனும் ஆதரவுடனும் தேர்தல் [illegible] எனது கொள்கைகளை ஆதரிப்பவர்கள் எனக்காகஆதரவு தேடியிருக்கலாம். நான் யாரையும் கேட்கவில்லை என மேலும் தெரிவித்தார்.

மனுதாரின் இன்னுேர் வழக்கறிஞரான திரு. கே. சி. சர்மா குறுக்குவிசாரணையின் போது திரு. கிரி தெரிவித்தாவது:-

பலர் நான் ஜனதிபதி பதவிக்கு பொருத்த மானவன் என எனக்கு ஆலோசனை கூறினர்கள். நீங்கள் பொருத்தமானவர். உங்களை ஆதரிப்போம் என திரு. நிஜலிங்கப்பா பெங்களூருக்கு புறப்பட முன் கூறியிருக்கின்றார். பஞ்சாப்முதல்மந்திரி, தமிழ்நாடு முதல்மந்திரி, ஹரியானு முதல் மந்திரி ஆகியோர் என்னிடம் ஆதரவு தருவதாகக் கூறினர்கள். அதனல் காங்கிரஸில் யார் ஆதரித்தார்கள் என குறிப்பிட்டுக் கூற முடியவில்லை என்றார்.

பத்திரிகையில் வந்த ஜனசங்க அங்கத்தவரின் கடிதத்தைக்காட்டிய போது தனது கவனத்திற்கு கொண்டுவரப்படவில்லை என்றார். மேலும் ஒரு கேள்விக்கு பதலளிக்கையில் தாரகேஸ்வரி சின்ஹாவைத்தேர்தல் சம்பந்தமாக தாம் சந்திக்க வில்லை என்றார்.

## இன ஒதுக்கலுக்கு தொடர்ந்து ஆதரவு

## வடபகுதி பொலிஸ்அதிபர் கூட்டும் வேட்பாளர் மாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி
பொதுத்தேர்தல் சம்பந்தமான விஷயங்கள் பற்றி ஆலோசனை நடாத்தஅபேட்சகர்களின் மகாநாட்டைக் கூட்டுவதற்கான ஒழுங்குகளை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் செய்துள்ளார். தேர்தல் சட்டவிதிகள், அமைதியான பிரசாரம் ஆகியவைபற்றியும் இம் மகாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

நாளை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் உடுப்பிட்டி, காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்கள் மகாநாடு நடைபெறும்.

இம்மாதம் 26-ம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சாவகச்சேரி, உடுவில், கோப்பாய் தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் மகாநாடு நடைபெறும்.

27-ம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நல்லூர், ஊர்காவற்றுறை, உடுப்பிட்டி தொகுதிகளின் அபேட்சகர்கள் மகாநாடு நடைபெறும்.

28-ம் திகதி பரந்தன் பொலிஸ் நிலையத்தில் வவுனியா, கிளிநொச்சி தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் மகாநாடு நடைபெறும்.

## "பிரச்னையை தீர்ப்பதில் ஒற்றுமைப்படாததேன்'

— துரையப்பா

கொழும்புத்துறை, வெள்ளி
'இதுவரை காலமும் தமிழர்களிடையே மொழிப் பிரச்னை தீர்க்கப்படவில்லை, எத்தனையோ பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டியுள்ள இச்சந்தர்ப்பத்தில் தமிழரசும் தமிழ்க்காங்கிரசும் ஒன்றுபட்டால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். யாழ்ப்பாண மாநகர முதல்வர் தேர்தலில் ஒன்றுபட்ட தமிழரசு - தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் தமிழ்மக்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதில் ஒற்றுமைப்படாதிருப்பது வியப்புக்குரியதாகும்.'

வழக்கறிஞர் திரு. வி. நடராசா தலைமையில் கொழும்புத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாளராகப் போட்டியிடும் திரு. அல்பிரட் துரையப்பா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்புத்துறை மாநகர சபை அங்கத்தவர் திரு. த. கந்தையா பேசுகையில், 'எமக்கு ஒரு பூரணமான பல்கலைக்கழகம் தேவை. தமிழரசும் தமிழ்க்காங்கிரசும் பிரிந்து நிற்பதால் பல்கலைக்கழகப் பிரச்னை பெரும் பிரச்னையாகவுள்ளது' என்று குறிப்பிடடார்.

திருவாளர்கள் கா. ச, நடராசா, பேரின்பநாயகம் உட்படப் பலர் பேசினர்கள்.

## ஒரே சூலில் மூன்று குழந்தை

புலோலி, வெள்ளி
புலோலி தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வீரபாகு என்பவரின் மனைவியான மங்கையர்க்கரசி (வயது 28) மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகளை அண்மையில் பெற்றெடுத்தார்

மூன்று குழந்தைகளும் தாயும்சுகமேஉள்ளனர். ஒரு குழந்தையின் நிறை நாலரை ருத்தல், இரண்டாவது குழந்தையின் நிறை மூன்றே முக்கால் ருத்தல், மூன்ருவது குழந்தையின் நிறை ஐந்தே கால் ருத்தல் ஆகும்.

குழந்தையின் தகப்பனர் பிரபல வியாபாரியாவார்.

## அமைதியான தேர்தல் பிரசாரம்

மூசலி, வெள்ளி
மன்னரில்தேர்தல்பிரசாரம் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்று வருகின்றது. இதுவரை மன்னரில் போட்டியிடும் மூவரும் ஊர்வலமோ, பிரசாரக் கூட்டமோ நடத்தப்படவில்லை. மன்னர் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. வி. ஏ. அழகக்கோன் மன்னர் யு. என். பி. வேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணையைப் பார்க்க கோர்ட்டுக்கு வந்திருந்தனர்.

திருமதி இந்திராகாந்தி, மந்திரிசபை அங்கத்தவர்கள் கட்சியின் தீவிரவாதிகள் ஆகியோரின் உதவியுடனும் ஆதரவுடனும் தேர்தல் பிரசாரம் நடைபெற்றதென்பதை மறுத்ததுடன் முழுக்க முழுக்க தம்முடைய குடும்பத்தினரின் உதவியிலேயே பிரசாரம்நடைபெற்றது என்பதை வலியுறுத்தினர். திரு. சஞ்சீவரெட்டி பற்றி வெளிவந்த பிரசுரம் பற்றி தனக்குத் தெரியாது எனமறுத்தார்.

மேலும் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்திற்கு முன்பு காங்கிரஸ் தலைவர் எஸ். நிஜலிங்கப்பா தன்னை ஆதரித்தார் என்பதை தெரிவித்ததுடன் தாம் தி. மு. க வின் ஆதரவு கோரி கடிதம் எழுதியிருக்கலாம் என்பதை ஒப்புக்கொண்டார்.

இரண்டாம்நாள் குறுக்கு விசாரணையின்போது முதல் நாள்நடைபெற்ற விசாரணையில் எழுப்பப்பட்ட தேர்தல் காலத்து பிரயாண விபரங்கள் அடங்கிய பத்திரிகைகளை ஜனதிபதி கிரி சமர்ப்பித்தார். அத்துடன் முதல் நாள் அளித்த சாட்சியத்தில் திரு. தேஷ்முக் பற்றி தான் தெரிவித்த கருத்து தமது கருத்தைத் தெளிவாக பிரதிபலிக்கவில்லை, ஆகவே திருத்தம் செய்யவேண்டும் என ஜனதிபதி கிரி தெரிவித்த போது மனுதார் வழக்கறிஞர் அதனை எதிர்த்தார். ஆனால் நீதிபதி திருத்தத்தை செய்ய உரிமை உண்டு என அனுமதி அளித்தார்.

அதன்பின் தொடர்ந்து குறுக்கு விசாரணையில் சுற்றுப் பிரயாணம் பற்றி பதிலளிக்கையில் பிரயாண விபரங்கள் பொதுமக்களுக்கும், பத்திரிகைக்கும் அனுப்பப்படும் எனது பிரயாணம் பற்றி வெளிப் பிரமுகர்களுக்கு எனது உதவியாளர்கள் அறிவிப்பது உண்டு என்றார்.

நான் 1936க்கும் 1957க்கும் இடையில் பல தடவை தேர்தலில் போட்டியிட்டேன். உதவி ஜனதிபதி தேர்தலிலும் போட்டியிட்டேன். அவ்வாறு போட்டியிடும் போது நான் ஆதரவு திரட்ட முற்படவில்லை. காங்கிரஸ் கட்சி அபேட்சகரை நிறுத்தப் பட்டமையினால் கட்சி எனக்கு ஆதரவு தேடியிருக்கலாம். நான் விருப்பத்தக்கவன் என மனச்சாட்சிகூறினல்வாக்குபோட வேண்டும் என்று கேட்டிருக்கின்றேன். இத்தேர்தலில் என்னில் அன்புடையவர்கள்

# இன ஒதுக்கலுக்கு தொடர்ந்து ஆதரவு

## தென் ஆபிரிக்க பிரதமர் பெருமிதம்

டேர்பன், ஏப். 24

தென்னுபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கைகளுக்கு மீண்டும் மக்களின் பேராதரவு கிடைத்திருப்பதாக பிரதம மந்திரி திரு' வொஸ்டர் கூறியிருக்கிருர்.

திரு. வொஸ்டரின் தேசியவாதிகள் கட்சி தென்னுபிரிக்க பொதுத்தேர்தலில் மீண்டும் பெரும்பான்மைப் பலத்துடன் பதவிக்கு வந்திருக்கின்றது. இந்தக் கட்சி கடந்த 22 ஆண்டுகளாகப் பதவியிலிருந்து வந்துள்ளது.

இந்தமுறை தேர்தலில் எதிர்க்கட்சியான ஐக்கிய கட்சியிடம், தேசிய வாதிகள் கட்சி சில தொகுதிகளை இழக்க நேர்ந்தபோதிலும் இன்னெரு கட்சியான ஐக்கியக் கட்சியை முழுதுமாக ஒதுக்கித் தள்ளியிருக்கின்றது.

தென்னுபிரிக்காவிலுள்ள ஒரு கோடி 60 லட்சம் ஆபிரிக்க இனத்தவர்களும் ஆஸியாக்காரர்களும் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்படவில்லை

# வானிலை ஆராய்ச்சிக்கு புதிய கருவிகள்

கொழும்பு, வெள்ளி

வானிலை ஆராய்ச்சி பகுதியினருக்கு விரைவில் சுமார் பத்துலட்சம் பெறுமதியான கருவிகள் கிடைக்கவிருக்கின்றன.

புதுடில்லிக்கும் கொழும்புக்கும் நேரடி தொடர்புடைய றேடியோ டெலிடைப் கருவிகளும், இதில் அடங்கும் திருக்கோணமலையிலும் கட்டுநாயக்காவிலும் நிறுவுவதற்கான வானிலை ஆராய்ச்சிக் கருவிகளும் கிடைக்கவிருக்கின்றன. விண்ணில் சுற்றிக்கொண்டிருக்கும் செயற்கைக் கிரகங்கள் எடுக்கும் வானிலை படங்களையும் அவைகள் தரும் செய்திகளையும் இந்தக்கருவிகள் தன்னியக்கமுறையில் பதிவுசெய்யக்கூடியவை.

சுவிட்சர்லாந்திலிருந்து கிடைக்கவிருக்கும் இக்கருவிகள் மூலம் வானிலை பற்றிய தகவல்களை மிகச்சரியாக முன்கூட்டியே அறிவிப்பது சாத்தியமாகும் என்று வானிலை ஆராய்ச்சிப்பகுதி இயக்குநர் திரு. எல். ஏ. டி. ஐ. ஏக்கநாயக்கா தெரிவித்தார். (சி. பி. ஏ.)

— —

## ஆலய உற்சவம்

புலோலி, வெள்ளி

கடந்த பத்துத்தினங்களாக நடைபெற்று வந்த காவை வெல்லன்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் 21-ந் திகதி நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் நேற்றுமுடிவடைந்தது.

## ''முட்டுக்கட்டை போடுகிறர்கள்''

அமிர்தலிங்கம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

''மலைநாட்டு தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்ததும், அல்லை, கந்தளாய், கல்லோயா, முதலிய பிரதேசங்களை சிங்கள மயமாக்கியதும் யு. என். பி. அரசாங்கமே இது போன்றகொடுமைகளை இழைத்துவரும் யு. என். பி. கட்சியின் ஆட்சியில் தான் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழலாம் என்று மாற்றுக்கட்சியின் தலைவர் கூறிவருகிருரே அக்கட்சியின் கீழ் எப்படி தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழமுடியும்.''

பருத்தித்துறை கடற்கரையில் தியாகிகள் அரங்கில் நடைபெற்றபிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஆட்சிமன்றத்தில் போராடினல் காங்கிரஸ் கட்சி முட்டுக்கட்டை போடுகிறது இதனல் நாம் தமிழினத்துக்கு எவ்வித நன்மையும் செய்யமுடியாமல் உள்ளது என்று திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜெயக்கொடி துரைரத்தினம் உட்படப் பலர் உரையாற்றினர்.

...வாங்கினர்.

தற்போது திரு. மெஹியூ கென்னடியின் ஞாபகச் சின்னங்களைச் சேகரித்து வருகின்றனர். இக்கட்டிடத்தை வா[...]யளன்பின் கூறியதாவது: கென்னடிக்கு கோயில் இக்கட்டிடத்தில் எழுப்பப்படும் என்றார்.

— —

## ''வெளிநாட்டவருக்கே முன்னர் நன்மை''

பிரதமர்

காலி, வெள்ளி

'1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் பதவிக்கு வரு முன்னர் எம்நாட்டுமக்கள் பிறநாட்டிலுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பையும்அளித்து பணத்தையும் அவர்களுக்கு கொடுத்தார்கள்.'

எல்பிட்டியாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் நான் எதிர்க்கட்சித்தலைவராக விருந்த பொழுதும் தற்போது பிரதமராகவிருக்கும்பொழுதும் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்துள்ளேன். 1658-ம் ஆண்டை நினைத்துப்பார்க்கும்பொழுது அப்போது நாட்டின் பல்வேறு சமூகங்களிடையே நிலவிய அமைதியின்மையால் அபிவிருத்தி தடைப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் எனதுஅரசாங்கம் நாட்டில் ஒற்றுமையுண்டு பண்ணியதால் அபிவிருத்தி வேலைகள் தடையின்றித் துரிதமாக நடைபெறுகின்றன இவ்வேலைகளில் மகாவலித்திட்டம் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். எதிர்க்கட்சியினர் 8படி அரிசி கொடுக்கப்போவதாக பிரசாரம் செய்கிருர்கள். எப்படி அவர்கள் கொடுப்பார்கள். டாக்டர் என். எம். பெரேரா நெல்லின் உத்தரவாத விலையையுயர்த்தி அதிக அளவு நெல்லைகொள்வனவு செய்வதாகக் கூறுகிருர். இவர்களின் கூற்றிலிருந்து எமதுஉணவுற்பத்தி பெருக்கத் திட்டம் வெற்றியீட்டியுள்ளதென்பது வெளிப்படையாகிறது. எதிர்வரும் தேர்தல் மிகமிகமுக்கியமானது. எனக் குறிப்பிட்டார். காணி நீர்ப்பாசன அமைச்சர் சி. பி. டி. சில்வா திரு. ரூபா கருணதிலகா உட்படப்பலர் உரையாற்றினர்.

அரேபிய வளைகுடா [...]ய இடங்களிலும் தமது ந[...]ன நிகழ்ச்சிகள் இடம் பெற விருப்பதாக அவர் மேலும் கூறினர்.

## கேரள முதல்வர் வெற்றி

திருவானந்தபுரம், ஏப். 24

கேரளாவில் நடைபெற்ற உப தேர்தல்களில் கேரள முதல்வர் சி. அச்சுதமேனன், புதுக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பி. காங்கர்தரன் ஆகியோர் வெற்றி பெற்றுர்கள்.

கேரள முதல்வர் பதவியை திரு. சி. அச்சுதமேனன் ஏற்றுக் கொண்ட போது சட்டசபை அங்கத்தவராக இருக்கவில்லை ஆறுமாதத்திற்குள் தேர்தலில் நின்று வெற்றி பெறவேண்டும் என்ற சட்டவிதிக்கு அமைய முதல்வர் தேர்தலில் போட்டியிட வசதி செய்யுமுகமாக திரு. சந்திரசேகரன் என்ற எம். எல். ஏ. பதவியை ராஜினுமாச் செய்தார். கேரள முதல்வர் போட்டியிட்ட கொட்டாக்கரைத் தொகுதியில் மொத்தம் ஆறுபேர்கள் போட்டியிட்டார்கள். இடதுசாரிக் கம்யூனிஸ் ஆதரவு பெற்ற சுயேச்சையாளர் திரு. சங்கர நாராயணனை 26000 மேலதிக வாக்குகளால் தோற்கடித்தார்.

நீலாம்பூர் தொகுதியில் மொத்தம் ஐந்து அபேட்சகர்கள் போட்டியிட்டார்கள். இத்தொகுதியில் போட்டியிட்ட இடதுசாரிக் கம்யூனிட் அபேட்சகர் அபுபக்கரை 4574 மேலதிக வாக்களால் புதுக்காங்கிரஸ் அபேட்சகர் பி. கங்காதரன் தோற்கடித்தார்.

......

## சிவனடிசங்க நிர்வாகிகள்

இமையாணன், வெள்ளி

இமையாணன் சிவனடிச் சங்கத்தின் இவ்வாண்டு உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. சோ. சபானந்தன். துணைத் தலைவர்: திரு. ந. பாலசுப்பிரமணியம் செயலாளர்: திரு. இ. விஷ்ணுலிங்கம், துணைச் செயலாளர்: திரு. ச. சிவசரவணபவ, பொருளாளர்: திரு. ந. அம்பிகாபதி, துணைப் பொருளாளர்: திரு. க. ஸ்ரீகந்தராசா, கணக்காளர்: திரு. கே. சுந்தரலிங்கம்.

எழுவர் கொண்டநிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

...தப்பிவந்ததாகவும் கூறப்படுகிறது. வை. எலியாஸ், சுப்பிரமணியம், மகேந்திரம், கிருஷ்ணபிள்ளை ஆகியோரே நான்கு சாரதிகளுமாவர்.

...ஐந்தே கால் ருத்தல் ஆகும்.

குழந்தையின் தகப்பனர் பிரபல வியாபாரியாவார்.

எதிர்க் கட்சியினரால்

# 'இரண்டு படி அரிசி கொடுக்கவே முடியாது'

— அசோகா

வக்கிரிகல, வெள்ளி

''கூட்டரசாங்கத்தில் நிதி மந்திரியாக இருந்த டாக்டர் என். எம். பெரேரா, தாங்கள் ஆட்சிக்குவந்தால் அரசாங்கம் அமைக்கப்பட்ட இரண்டு மாதத்தில் இரண்டு கொத்து அரிசி கொடுப்போம் என்று சொல்கிருர். அதே நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரபலஸ்தரும், தம்புள்ள முன்னுள் ஆட்சி மன்ற உறுப்பினருமான திரு. ரி. பி. தென்னக்கூன் வெற்றிபெற்ற மறுநாளே கொடுப்போமென்று சொல்கிருர். இந்த மாறுபட்ட அறிக்கைகளிலிருந்து அவர்களால் இரண்டு கொத்து அரிசி கொடுக்கமுடியாதென்பதையே காட்டுகின்றது.''

இவ்வாறு வக்கிரிகல கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சமரசிங்காவின் தலைமையில் வக்கிரிகல கிராமச்சபை ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களைக் கொண்ட கூட்டத்தில் சமூக சேவை அமைச்சர் திரு. அசோகா கருணரத்ன கூறினர்

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், முன்பு அமைச்சராக இருந்தபொழுது 21 கோரிக்கைகளை நடைமுறைப்படுத்திய வழியில் இந்த இரண்டு கொத்து அரிசிப் பிரச்சினையையும் செய்யப்போகிருரா? என என். எம். பெரேராவைக் கேட்க விரும்புகிறேன்.''

ஐக்கிய தேசியக்கட்சியின் கேகாலை அபேட்சகர் திரு நிசங்கா செனிவரத்ன பேசுகையில் முன்னைய அரசாங்கம் கறுவாக்காட்டில் உள்ள பெற்றேரின் குழந்தைகளுக்கு ஒக்ஸ்போட்டிலும், பிரான்ஸிலுள்ள சொபோன் பல்கலைக்கழகத்திலும் சேர்வதற்குத்தான் உதவி புரிந்தது என அவர் குறிப்பிட்டார்.

கிராமசபைத் தலைவர் திரு எஸ் சமரசிங்க, துணைத் தலைவர் திரு. ஏ. ஆர். ரண்டிவெல, திரு. ஜோன்சன் ஜயசிங்கா, திரு. டொமிரத்ன ஆகியோரும் பேசினர்.

...போட்டியிடும் ... ஊர்வலமோ, பிரசாரக் கூட்டமோ நடத்தப்படவில்லை. மன்னர் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. வி. ஏ. அழகக்கோன், மன்னர் யு. என். பி, வேட்பாளர் திரு. எம். எஸ். ஏ. றகீம், மன்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திம். என். எம். காதர் ஆகியோர் எந்த விதமான பிரசாரக்கூட்டமும் எவ்விடத்திலும் வைக்கவில்லை.

——

## நிர்வாகசபை கூட்டம்

புத்தூர், வெள்ளி

அச்சுவேலி தோப்பு வாலிப முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. பொ. ச. கந்தசாமி தலைமையில்போதிப்பிள்ளையார் முன்றலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இதுவரை இயங்கிவருவதாகக் கூறப்படும்அச்சுவேலி தோப்பு கிராமமுன்னேற்றச் சங்க கூட்டத்தை ஒருவார காலத்துக்குள் கூட்டும்படி அதன் நிர்வாகத்துக்கு கடித மூலம் அறிவித்தல் கொடுத்தல்.

பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டபடி வாசிகசாலையின் இடத்தை ஒரு மாத காலத்துக்குள் தெரிவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.

எமது சங்கத்தை பதிவு செய்ய ஏற்றநடவடிக்கை எடுத்தல்.

# யூ.என்.பி.க்கும் காங்கிரஸுக்கும் வித்தியாசமில்லையாம்

உடுப்பிட்டி, வெள்ளி

''டட்லி சேனநாயக்கா அல்லது ஸ்ரீமாவோ அடுத்த பொதுத் தேர்தலின் பின்பு தமிழரசுக் கட்சியின் காலடியில் விழுந்துதான் ஆட்சி பீடமேறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்.''

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் முன்னள் நீதிபதி திரு. கே. ஜெயக்கொடி மந்திகை கண்ணகை அம்மன் கோவிலடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

இக்கூட்டம் கடந்த சனிக்கிழமை இரவு இளைப்பாறிய ஆசிரியர் திரு. த. ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது. திரு. கே. ஜெயக்கொடி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இன்றைய அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தவரையில் யு. என. பி.க்கும் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் வித்தியாசம் கிடையாது. யு. என். பிக்கு கிழக்கிலங்கையைத் தமிழ்க் காங்கிரஸ் விட்டுக்கொடுத்துவிட்டது. இதிலிருந்து இரு கட்சிகளின் நோக்கமும் ஒன்றே என்று கூறலாம். போட்டியில்லா ஒப்பந்தங்கள் வெறும் கண்துடைப்பே.

யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் உரிமையைப் பெறவேண்டும் என்பதுதான் தமிழரசுக் கட்சியின் நோக்கமாகும்.

பருத்தித்துறை முன்னள் எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் ஒற்றுமையினல்தான் நாம் உரிமைகளைப் பெறமுடியும் என்று சொன்னர்.

திருவாளர்கள் சண்முகநாதன், சி. கிருஷ்ணமூர்த்தி, இராஜேஸ்வரன் ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மோட்ச சாம்ராஜ்யமானது வயலில் நல்ல விதை விதைத்த மனிதனுக்கு ஒப்பாக இருக்கிறது.
-- யேசுநாதர்.


# ஈழநாடு

Eelanadu (N. tional Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 12-ந் திகதி (25-4-70)


## தமிழரின் தேவைகள்

எந்த ஒரு சமூகமாயினும் சரி, அது தனது தேவைகளைப் பற்றி சிந்திப்பதுடன், அவற்றை நிறைவேற்றிக்கொள்ள ஒரு வேலைத்திட்டத்தையும் தயாரித்துக்கொள்வது முக்கியமாகும். அவ்விதமான வேலைத் திட்டம் சில அம்சங்களில் அவ்வப்போது மாற்றி அமைத்துக்கொள்ளக்கூடியதாகவுமிருக்கும். சங்கங்கள் ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள் முதலியன இப்படியான ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரிப்பது அவற்றின் முக்கிய பொறுப்பாகும். சமூகத்திலுள்ள தனிப்பட்டவர்களும் இவ்வித விஷயங்களில் தங்கள் மனதைச் செலுத்தி தக்க யோசனைகளைக் கூறி அவற்றை சங்கங்களும் ஸ்தாபனங்களும், அரசியல்கட்சிகளும் சிந்தித்து செயலாற்றி சமர்ப்பிக்க தீவிர ஆர்வம் காட்டவேண்டும்.

சிறப்பாக தமிழ்சமூகத்தைப் பொறுத்தவரை சமூக மனைத்தும் கூட்டாகவும், தனிப்பட்ட முறையிலும், தன் முன்னேற்றத்துக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் மிகவும் தேவையான இவ்வித திட்டம்பற்றி ஆழ்ந்து சிந்திக்கவேண்டியது மிகவும் அவசியமாகின்றது. தமிழ்சமூகத்துக்கு இந்நாட்டில் அரசியல் அதிகாரமெதுவுமில்லை. தமிழ் மக்களின் வாழ்க்கைத்தேவைகளைப் பற்றி அரசாங்கமும் போதிய அக்கறை காட்டாது. எந்தக் கட்சியினர் ஆட்சியைப் பொறுப்பேற்ருலும் சரி, அதிகாரமனைத்தும் தமிழரல்லாதவர்களின் கையிலேயே இருக்கும். ஆகவே தமிழர் தங்கள் நிலைமையை மேம்படுத்திக் கொள்ள, அரசாங்கத்தையே நம்பியிராமல், தாங்களே இதில் அதிக சிரத்தை காட்ட முன்வரவேண்டியது அதிக அவசியமாகின்றது.

இலங்கையின் சரித்திரத்திலும் இங்குள்ள தமிழ் சாதியினரின் சரித்திரத்திலும் ஒரு நெருக்கடியான முரமாகநடந்துவருகின்றன இந்நாட்டிலே எங்கெங்குமுள்ள தமிழர், தங்கள் நன்மைக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் நல்ல யோசனைகளை வகுத்து, கூடுமானவரை அவற்றுக்குப் பிறசமூகத்தவரின் ஆதரவைப் பெற முயலுவதுடன் தமிழ்த்தலைவர்களும் தீர்க்க தரிசனத்துடன் பொது மக்களுக்குத் தக்க யோசனைகளைக் கூறவேண்டும். தமிழ்ப் பொதுமக்களுக்கும் ஒரு கடமை உண்டு. தங்கள் சமூகத்துக்கான எல்லா காரியங்களையும், பொறுப்புகளையும் தங்கள் தலைவர்களுக்கே ஒப்படைத்துவிட முடியாது. பொதுவிஷயங்களிலே ஒவ்வொரு தமிழரும் தங்கள் தங்கள் பங்குக்கான பொறுப்பை ஏற்று தலைவர்களுக்கு அவ்வப்போது தக்க யோசனைகளைக் கூறுவதுடன், சமூகமும் நாடும் முன்னேறி நலம் பெறுவதற்கான நல்ல திட்டங்களை வகுக்க வேண்டும்.

சமூகத்தைச் சேர்ந்த எல்லாப் பிரிவினரும் ஆண்களும் பெண்களும், வாலிபர்களும், முதியோர்களும் தமிழ்சமூகத்தின் நல்வாழ்வுக்கானமுறையில் ஒத்துழைத்து கூடுமான முயற்சி எடுக்கவேண்டியது அவசியமாகும். சமூகத்தின் எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும் பிணைந்திருக்கின்றது. தமிழர் இந்நாட்டின் பிரஜைகள் ஆகவே அவர்களுக்கு சரிசமமான உரிமைகள் இருக்கவேண்டும். சிறப்பாக வாலிபர்களின் ஆக்கபூர்வமான தீவிர ஒத்துழைப்பு, தமிழ்மக்களின், நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகமிக அவசியமென்பதை சொல்லத் தேவையில்லை. இப்போதுள்ள இளம்சந்ததியார்தான் எதிர்காலத் தலைவர்களாகப் போகின்றனர் அவர்களைப் பொறுத்தே எதிர்காலமும் இருக்கும். ஆகவே நமது இளம் சந்ததியினர், சமூக, நாட்டுப்

# மொழி அந்தஸ்து – பல்கலைக்கழகம் – சர்வகட்சிமகாநாடு

# -- தமிழ்க்காங்கிரஸின் தேர்தல் விஞ்ஞாபனம்--

'சமூக குறைபாடுகளை நீக்கி கல்வி வசதி, வேலை வாய்ப்பு ஆகியவற்றை சிறுபான்மைத் தமிழருக்கு அளித்து அவர்களை எழுச்சியுறச் செய்வதோடு பல அங்கத்தவர் தொகுதிகளையுருவாக்கி ஆட்சிமன்றத்திலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் அவர்கள் அங்கத்துவம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளுவோம்.

கள்ளக் கடத்தலையும், சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்போம். வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு கரையோரங்களில் கடமையில் உள்ள கடற்படையின் மூலம் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக் கடத்தலையும் தடைசெய்ய வேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்துவதோடு இதுவரை மக்கள் வாழும் இப்பகுதிகளில் நிறுவப்பட்டிருக்கும் இராணுவமுகாம்களை அகற்றவேண்டுமெனக் கோருவோம் இந்தவிடயத்தில் முக்கிய கவனம் செலுத்தி எங்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய அரசாங்கத்தை வற்புறுத்தவுள்ளோம்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

### வட்டமேசை மகாநாடு

தமிழ்க் காங்கிரஸ்தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் அரசாங்க ஊழியர், இந்திய பிரஜாவுரிமை, அரசியல் உரிமைகள், மொழி ஆகியன சம்பந்தமான பிரச்னைகள் கிளம்பும்போது இவற்றைக் கட்சியடிப்படையில் தீர்க்கமுடியாது சகல அரசியல் கட்சிகளும் சேர்ந்து வட்டமேசை மகாநாடு கூட்டி இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டும். நாங்கள் இத்தகைய வட்டமேசை மகாநாடு கூட்டப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம்.

அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு இவர்களது சமய வழிபாட்டுக்கு வெள்ளிக்கிழமைதோறும் 4 மணிநேர லீவு வழங்கவேண்டுமென் தமிழ் காங்கிரஸ் அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது அரசாங்கம் இது குறித்து ஆலோசனை நடத்தி வருகிறது. ஆனல் இன்னும் ஒருமுடிவுக்கும் வரவில்லை இந்து அரசாங்க ஊழியர்களுக்கு இந்த வசதியை விரைவில் செய்து கொடுப்போமென உறுதியளிக்கிரேும்.

### தமிழ்மொழியின் அந்தஸ்து:

அடுத்து மொழிப் பிரச்னையைப் பொறுத்து நாங்கள் வேண்டுவது என்னவெனில் தமிழ் மொழி இலங்கையின் அரசகரும மொழியாகவும் தேசிய மொழியாகவும் இருக்கவேண்டும். சிங்களவர்களுக்குச் சிங்களம் போன்று தமிழர்கள் நாட்டின் எந்தப்பகுதியில் வாழ்ந்தாலும் தமிழ் மொழி அவர்களின் தாய்மொழியாகவிருக்கவேண்டும், தமிழ் மொழி இந்நாட்டில் விளங்க வேண்டுமானுல்தமிழ்மொழி இருமாகாணங்களில் மட்டும் கட்டுப்படுத்தப்படாது நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அதற்கு இடமளிக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறேும். தமிழ் மொழி தனக்குரிய அந்தஸ்தை நாட்டின் சகல பகுதிகளிலும் பெருவிட்டால் முடிவில் நட்டின் ஒடு பகுதியிலும் அதற்கு இடமிருக்காது.

### தாய்மொழிக் கல்வி

தமிழ் பேசும் பிள்ளைகளுக்கு அவர்கள் இந்நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அரசு ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கல்வி வரை நல்ல கல்விவசதியளிக்கவும் சிங்களமாணவர்கள் போன்று இவர்களுக்கும் பல்கலைக்கழகங்களின் சம உரிமைகள் வழங்கப்படவும் சர்வதேச மொழியாகிய ... ஆங்கிலமும் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் கட்டாயமாகஇரண்

வேண்டுமெனக் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கோரும்.

காலஞ் சென்ற திரு. பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்த காலந்தொட்டு வடபகுதிக்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவவேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டு 1963-ம் ஆண்டு திருமதி பண்டாரநாயக்காவின் வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக அடையாள மானியம் ஒதுக்கப்பட்டது. அடுத்து வந்த அரசாங்கங்களும் இதனை அங்கீகரித்தன ஆனல் தமிழரசுக் கட்சியின் மாறுபட்ட கொள்கையால் 1965-ம் ஆண்டு இராமநாதன் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்ற எங்கள் கோரிக்கை தடைப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அதிகமான மாணவர்கள் கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கு செல்லுகிருர்கள். இந்த மாணவர்கள் கஷ்டமான நிலையில் உள்ளதால் அவர்கள் செலவினங்களைச் சமாளிக்க இயலாதவர்களாகவுள்ளனர்.

1500 க்குள் மேலானமாணவர்கள் இந்தியாக்கு கல்விபெறச் சென்றுள்ளார்கள். மேலும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அதிக செலவின்றி அமைவதற்கான கட்டிடங்களோடு கூடிய இடவசதிகளும் உள்ளன. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படுதல் அவசியம் என்பது தெளிவாகிறது. இப்பல்கலைக் கழகம் நிறுவுவது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேசிய உயர் கல்விச் சபையைப் பணித்தது அரசாங்கம் தீர்மானிக்கும் இப்பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படுவதற்கு நாங்கள் நடவடிக்கைகள் எடுப்போம்.

வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தமிழ் காங்கிரஸ் முயற்சியெடுக்கும். ஆதாவது வேலைவாய்பளிக்கும் போது தற்போது போன்று தொகுதி வாரியாக வழங்காமல் தராதரங்களைப் பார்த்து வழங்க வேண்டுமெனக் கோரவுள்ளது.

பொருளாதாரத் துறையில் நாட்டை முன்னேற்றுவதற்கு கைத்தொழில் அபிவிருத்தியில் நாங்கள் உடனடியாகப் பின்வரும் திட்டகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்: வடமாகாணத்தில் ஒரு சீனித் தொழிற் தொழிற்சாலை, புல்மோட்டையில் ஒரு தொழிற்சாலை, உப்பு உற்பத்தி தொழிலை விஸ்தரித்தல், பரந்தன் சோடாத் தொழிற்சாலையை விஸ்தரித்தல் மூதூர், பரந்தன் ஆகிய இடங்களில் ஓட்டுற்பத்தித் தொழிற்காலை நிறுவுதல் வடபகுதி, புத்தளம் ஆகிய இடங்களில் எண்ணெய் கானப்படும் சாத்தியக் கூறு உள்ள இடங்களின் ஆய்வு நடத்தல்.

இவற்றை விட குடிசைக் கைத்தொழில்கள், கடற்றொழிலை நவீன மயமாக்கல் மின்சாரம் நீர் விநியோகம் ஆகியவற்றிலும் குடா நாட்டினை முன்னேற்ற தமிழ்காங்கிரஸ் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

# 52 தொகுதிகளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)



கிய முன்னணி மூன்று இடங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நேரடியாக மோதுகின்றது. கூட்டரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்திருந்தலங்கா சமசமாஜக்கட்சி 7 இடங்களில் ஐ. தே. கட்சியை நேரடியாக எதிர்க்கின்றது.

வடபகுதியில் இரு இடங்களில் தமிழரசு-தமிழ்க்காங்

# 1965, 1970 தேர்தல்கள்!

எதிர்வரும்பொதுத்தேர்தலில் இம்முறை 437 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். சென்ற தேர்தலில் 495 அபேட்சகர்கள் போட்டியிட்டனர்.

எதிர்வரும் மே மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கும் இலங்கையின் 7-வது ஆட்சிமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடவிருக்கும் இந்த 437 அபேட்சகர்களில் 304 அபேட்சகர்கள் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட 7 கட்சிகளைச் சேர்ந்தவர்களாவர் எஞ்சிய 133 அபேட்சகர்களில் சுயேச்சைவாதிகளும் அங்கீகரிக்கப்படாத கட்சியைச் சார்ந்தவர்களும் உள்ளனர்.

இவர்களில் 19 பெண் வேட்பாளர்களும் உள்ளனர் இந்தப் 19 பெண்களில் எதிர்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஒருவராவர். 11 பெண்மணிகள் 1965-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களில் 4 பேர் வெற்றி பெற்றனர். இதன்பின்னர் நடைபெற்ற இடைத் தேர்தலின் போது மேலும் 2 பெண்கள் ஆட்சிமன்ற அங்கத்தவர்களாகினர். 1965-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்ட கட்சி அபேட்சகர்களும் அதில் வெற்றி பெற்றவர்களும் பின்வருமாறு:-

(அடைப்புக் குறிக்குள் முறையே போட்டியிட்ட அபேட்சகர்களும் - வெற்றி பெற்றவர்களும். அக்கட்சி எதிர்வரும் தேர்வில் நிறுத்தியுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையும்)

0 ஐக்கிய தேசியக் கட்சி (112-66)—129
0 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (101-41)—109
0 லங்கா சமசமாஜக் கட்சி (25-10)—22
0 மொஸ்கோ சார்பு கம்யூனிஸ் கட்சி (9-4)9
0 மாகாஜானஎக்சத்பெரமுன (61-1)—5
ஜாதிக விமுகதி பெரமுன (10-1)—0
0 சமஷ்டிக் கட்சி (20-14)—19
0 தமிழ் காங்கிரஸ் (15-3)—12
0 சுயேச்சை (106-6)—137

கொழும்பு மத்திய தொகுதியிலேயே நாட்டின் சகல தொகுதிகளிலும் பார்க்க

இந்தத்தொகையில்நாலில் ஒரு பகுதியினர் 18-21வயதுககும் இடைப்பட்டவர்களாகஉள்ளனர். (1931-ம் ஆண்டு இலங்கையருககு வாககுரிமைபிரிடடிஷாரால் வழங்கப்பட்ட பொழுது வாககளிககும் வயது 21-ஆக கணிககப்பட்டுள்ளது. இந்த வயதுக்கட்டுப்பாடு 1959-ம் ஆண்டு 18 ஆகக குறைகஃப்பட்டது,

இம்முறை பொதுத்தேர்தலில் 100,000பேர் தபால் மூலம் வாககளிக்கவுள்ளனர் தேர்தல்வேலைக ளைககவனிக அகைழப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்கள், ராணுவம். பொலிஸ், தபால்தந்தி தொடர்பு ஊழியர்கள். இ பொ ச, புகையிரதப்பகுதி ஊழியர்கள் ஆகியோர் இத்தபால்மூலம் வாககளிப்பவர் தொகையில் அடங்குவர் 1960-ம் ஆண்டிலேயே தபால்மூலம் வாககளிககும் உரிமை வழங்கப்பட்டது கடந்த பொதுத்தேர்தலின் போது 34000 பேர் வாககளித்தனர்

நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளின் தீவிர தேர்தல் பிரசாரங்களை நோககும் பொழுது இந்தத்தடவை முன்னரிலும்பார்கக வாககளிப்போர் வீதம் அதிகரிககலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர் 1947ம்ஆண்டுமுதல்முதலாக தேர்தல் நடைபெற்ற பொழுது 61.3 வீதத்தினர் வாக்களித்தனர். பின்வந்த தேல்தல்களின்போது இத்தொகை படிப்படியாக அதிகரித்து கடந்த பொதுத் தேர்தலின்போது 82·1 வீதமாகஉயர்ந்துள்ளது. இந்தத் தடவை 85 சத வீதமாக உயரலாம் என மேற்படி அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

25,332 சதுர மைல் விஸ்திரணத்தைக் கொண்ட இத்தீவு 145 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 5 தொகுதிகளைவிட மற்றைய யாவும் தனி அங்கத்தவர் தொகுதிகளாகும்.

கொழும்பு மத்தியபகுதி (3 அங்கத்தவர்கள் கொழும்பு தெற்கு (2 அங்கத்தவர்கள்) அக்குறனை (2 அங்கத்தவர்), மட்டக்களப்பு (2 அங்கத்தவர்), மூதூர் (2 அங்கத்தவர்) ஆகிய தொகுதிகளே பல அங்கத்தவர் தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையே நம்பியிராமல், தாங்களே இதில் அதிக சிரத்தை காட்ட முன்வரவேண்டியது அதிக அவசியமாகின்றது.

இலங்கையின் சரித்திரத்திலும் இங்குள்ள தமிழ் சாதியினரின் சரித்திரத்திலும் ஒரு நெருக்கடியான கட்டம் ஏற்பட்டிருக்கின்றது. பழைய பார்லிமெண்ட் சபை கலைக்கப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டு மாதங்களுக்குள்ளாக புதிய பார்லிமெண்டும் அரசாங்கமும் ஆட்சிக்கு வரும். இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தேர்தல்பிரசாரங்கள் மும்

தேவையில்லை. இப்போதுள்ள இளம்சந்ததியார் தான் எதிர்காலத் தலைவர்களாகப் போகின்றனர். அவர்களைப் பொறுத்தே எதிர்காலமும் இருக்கும். ஆகவே நமது இளம் சந்ததியினர், சமூக, நாட்டுப் பிரச்னைகளையெல்லாம் பொறுப்புடன் நிதானமாக ஆலோசிப்பதுடன் பெரியவர்களும் இளம் சந்ததியினரை மதித்து, அவர்களது தேவைகளை நிறைவேற்றிவைக்கும் முறையில் காரியங்கள் செய்யவேண்டியது அவசியமாகின்றது.

அரசியல் கட்சிகளும் சேர்ந்து வட்டமேசை மகாநாடு கூட்டி இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டும். நாங்கள் இத்தகைய வட்டமேசை மகாநாடு கூட்டப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம்.

அரசாங்க ஊழியர்களுக்கு அவர்களது அதிகாரபொறுப்புகளுக்கேற்ப அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். இதற்கு அரசாங்கம் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டி நடவடிக்கையெடுக்க வேண்டுமென தமிழ் காங்கிரஸ்கோரும் மேலும் இந்து

வரை நல்ல கல்விவசதியளிக்கவும் சிங்களமாணவர்கள் போன்று இவர்களுக்கும் பல்கலைக்கழகங்களின் சம உரிமைகள் வழங்கப்படவும் சர்வதேச மொழியாகிய ஆங்கிலமும் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் கட்டாயமாக இரண்டாவது மொழியாக்கப்படுவதோடு ஆங்கில மொழிவாயிலாகத் தங்கள் கல்வியைத் தொடர்பவர்களுக்கு அனுமதியளித்து அதற்கு வேண்டிய வசதிகளையளிக்கவும் நாட்டின் சிறுபான்மை இனத்தவர்கள் கல்விநிறுவனங்களை நிறுவி நிர்வகிக்க உரிமை வழங்கவும் தமிழ் காங்கிரஸ் கோரும் போதனுமொழிவிடயத்தில் தமிழ் பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே தமிழ் மொழியே போதனுமொழியாக விருக்க வேண்டும். ஆங்கிலக்கல்வி 3-ம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படுவதோடு ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் கட்டாய பாடமாக்கப்படுதல் வேண்டும். தாங்கள் ஈடுபட்டதுறையில் நல்ல தேர்ச்சியைப் பெற வாய்ப்பளிக்குமுகமாக பல்கலைக் கழகப் பரீட்சையில் ஆங்கில மொழியிலும் ஒரு பரீட்சை நடாத்தப்படவேண்டும். மேலும் ஆசிரியர் நலனையும் கல்வித் தரத்தையும் பாதுகாக்க பொதுசேவைக் கமிஷன் போன்று கல்வி சேவைக் கமிஷன் ஒன்று ஆசிரியர் சங்கங்கள், மாணவர் மன்றங்கள், கல்வி இலாகா முதலியனவற்றின் அங்கத்தவர்களைக் கொண்டு நிறுவப்பட



யக்கட்சிக்கு அபேட்சகருக்கும் பட்டுருப்பில் நேரடிப் போட்டி நடைபெறுகிறது. 52 தொகுதியின்

நேரடிப் போட்டி நடக்கும் 52 தொகுதிகள் வருமாறு:

வத்தளை, நீர்கொழும்பு, மகற, தொம்பே, அவிசாவெல, கொலன்னுவ கோட்டே, தெகிவளை-கல்கிசை, கெஸ்பாவ, கொறன்ன, களுத்துறை, மத்துகம, டம்புல்ல, மாத்தளை, ரத்தோட்ட, கலகெதற, உடுநுவற, கண்டி, மினிப்பே, வலப்பனை, அங்குருங்கட்டை, பெந்தற-எல்பிட்டிய, வத்தேகம, வெலிகம, டெனியாய, அக்மனை, பெலியத்த முல்கிரிகல்ல, ஹேவாகெற்ற, வட்டுக்கோட்டை, சாவச்சேரி, பட்டிருப்பு, சிலாபம், வென்னப்புவ, குளியாப்பிட்டி. பொல்காவெல, மாவத்தகம, ஹொறவப் பொத்தான, களாவெவ, மின்னேரியா, பொலனறுவ, மகியங்கனை, பிபிலை, பதுளை, அப்புத்தளை, மொணருகல, எட்டியாந்தோட்டை, ருவன்வெல, பெல்மதுல்ல, றக்குவானை, நிவிட்டிகல.

1970ம் ஆண்டில் நடைபெறும் 7-வது ஆட்சி மன்றத் தேர்தலில் 39 இடங்களில் ஐக்கியதேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் நேரடியாகப் போட்டியிடுகின்றன. தேசிய அரசாங்கத்தில் இணைந்திருந்தமக்கள் ஐக்

மோதுகின்றது. கூட்டரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்திருந்தலங்கா சமசமாஜக்கட்சி 7 இடங்களில் ஐ. தே. கட்சியை நேரடியாக எதிர்க்கின்றது.

வடபகுதியில் இரு இடங்களில் தமிழரசு-தமிழ்க்காங்கிரஸ்கட்சிகள் நேரடியாகப் போட்டியிடுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் ஐ. தே. கட்சி தமிழரசுடன் நேரடியாக மோதுகின்றது.

### நேரடிப்போட்டி விபரம்

ஐ. தே. க - ஸ்ரீ. ல. சு. க-39
ஐ. தே. க - ல. ச. ச க - 7
ம. ஐ. மு - ஸ்ரீ. ல சு. க- 3
ஐ தே. க - தமிழரசு - 1
தமிழரசு-தமிழ்காங்கிரஸ்-2



அமைச்சர் ஹூருள்ள

ஹொரவப்பொத்தானையில் போட்டியிடும் போக்குவரத்து அமைச்சர் ஈ. எல். பிகுருளையை ஸ்ரீலங்கா கட்சியின் வேட்பாளர் ரி. பி. ஹெரத் எதிர்க்கின்றார்.

உணவு அமைச்சர் எம். டி. பண்டா பொல்காவலைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் எம். பி. ஹெரத்தின் நேரடி எதிர்ப்பை எதிர்நோக்குகின்றார்.

(10-1)—0
0 சமஷ்டிக் கட்சி
(20-14)—19
0 தமிழ் காங்கிரஸ்
(15-3)—12
0 சுயேச்சை
(106-6)—137

கொழும்பு மத்திய தொகுதியிலேயே நாட்டின் சகல தொகுதிகளிலும் பார்க்க கூடிய அபேட்சகர்கள் போட்டியிடுகிருர்கள். இத்தொகுதியில் 8 அபேட்சகர்கள் போட்டியிடுகிருர்கள்.

125 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டவாக்களிக்கத் தக்க மக்கள் 5,525,028 பேர் உள்ளனர். இத்தொகை கடந்த பொதுத் தேர்தலின் போதுள்ள எண்ணிக்கையிலும் பார்க்க 814,141ஆல் அதிகரித்துள்ளது.

கொழும்பு மத்தியபகுதி (3 அங்கத்தவர்கள் கொழும்பு தெற்கு (2 அங்கத்தவர்கள்) அக்குறனை (2 அங்கத்தவர்), மட்டக்களப்பு (2 அங்கத்தவர்), மூதூர் (2 அங்கத்தவர்) ஆகிய தொகுதிகளே பல அங்கத்தவர் தொகுதிகளாகும். இதனால் 145 தொகுதிகளிலும் 151 அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படுகிருர்கள். இதைவிட 6 அங்கத்தவர்களை மகாதேசாதிபதி தெரிவுசெய்கிருர். இதனோடு அங்கத்தவர்கள் தொகை 157 ஆகிறது. (1660-ம் ஆண்டு 101 அங்கத்தவர்களே தெரிவுசெய்யப்பட்டனர், இவர்களில் 95 பேரே தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்கள்] [சி. பி. ஏ.]

# தேர்தல் தேவையில்லை புரட்சியே ஒரேவழி

## சண்முகதாசன் அறிக்கை

சமாதானம் மூலம் சோஷலிஸத்தை கொண்டுவரும் கொள்கையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (பீக்கிங் சார்பு) ஏற்றுக்கொள்ளாத காரணத்தினுல் பொதுமக்களை எதிர்வரும் பொதுத் தேர்தலை நிராகரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றது.

தேர்தல் தற்போதைய நிலைமைகளுக்கு ஒரு தீர்வு காணும் மாற்றுவழியல்ல. ஏகாதிபத்திய வாதிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமை ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சக்திகளை ஒன்றுசேர தடையாகவும், பிரிப்பதாகவும் இருக்கின்றது. எமது மக்கள் எட்டுமுறை வாக்களித்திருக்கின்ருர்கள். இவ்வாக்களிப்பு இரண்டு அரசாங்க சபைக் காலத்தேர்தலிலும் அதன்பின் தற்போதைய பாராளுமன்றத்தின் தேர்தலிலும் நிகழ்ந்தது. சிலருக்கு புகழ் தேடிக்கொடுக்கவும், நெருப்பைக் கக்கும்பேச்சாளர்களை உருவாக்கவும் விவாதிப்போரை உருவாக்கவும்தான் கடந்த 30 ஆண்டு அரசியல் அமைப்பு உதவியது.

கடந்த 30 ஆண்டுகளின் கேலிக்கூத்தான முன்னேற்றம் இதுதான்.

### விளையாட்டுப் போட்டியை போன்றது.

உதைபந்தாட்டம்; கிரிக்கட் போட்டிகளில் இருபக்கத்தவர்கள் கலந்துகொள்ளும் விளையாட்டுப் போன்றதே பாராளுமன்ற அமைப்பு எதிர்ப்பதற்காக எதிர்க்கட்சித்தலைவிக்கு அரசாங்கம் உயர்ந்த சம்பளத்தைக் கொடுக்கின்றது. நம்பிக்கைத் துரோகியான சமசமாஜ கட்சி தலைமைப்பீடமும். பீட்டர் கெனமன் கும்பலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கே உதவுதாக அமைகிறது. இவ்விருகட்சிகளும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு முகஸ்துதிபாடும் பாராளுமன்ற ஜனநாயகத்தில் விழுந்திராவிட்டால் ஐக்கிய தேசியக்கட்சி மக்களின் கண்களை மறைக்க சந்தர்ப்பம் ஏற்படாது.

பாராளுமன்றம் அறிமுகப்படுத்தப்பட்ட 1947ம் ஆண்டின்பின் 9 ஆண்டுகள் சேனநாயக்கா அரசாங்கமும், அதன்பின் 9 வருடம் பண்டாரநாயக்கா அரசாங்கமும் அதன்பின் டட்லி சேனநாயக்காவின் 5 வருட அரசாங்கமும் நிலப்பிரபுத்துவ பிரச்சினைகளை தீர்க்கவில்லை.

### 5 வருடம் செய்ததென்ன

மேற்படி கொள்கைகளின் முடிவால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மறைமுகமாக நாம் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்கவில்லை. பிரதமரும் திருமதி பண்டாரநாயக்காவும் மக்களுக்கு இதுபற்றி என்ன கூறுகின்ருர்கள் என்பதை நாம் எடுத்துக்காட்டினேம். பிரதமர் 5 வருட ஆட்சியில் என்னசெய்தார்? ஜனநாயக முறையில் செயற்பட்ட எதிர்க்கட்சித் தலைவியால் என்னசெய்யமுடிந்தது இவர்கள் எல்லாம் பாராளுமன்ற முறையிலுள்ள தடுமாற்றத்தைக் கவனிக்கவில்லை.

கூட்டுக்கட்சியினர் ஜனவரி 8-ம் திகதி வேலைநிறுத்தத்தால் வேலையிழந்த அல்லது தண்டிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலன்நாடி பொது வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள முற்பட்டபோது நிராகரித்தனர்.

ஐக்கியதேசியக்கட்சி கூப்பன் அரிசியை வெட்டியபோது இரண்டாவதுபொது வேலைநிறுத்தத்தையும் கூட்டுக்கட்சியினர் தவறவிட்டனர். அகில இந்திய ரீதியில் மேற்கொண்ட 1967 தனியார்துறை வேலைநிறுத்தத்தினதும், 1968 அரசாங்க துறை பொது வேலைநிறுத்தத்தினதும் வீழ்ச்சிக்கு உதவினுர்கள்.

நான்கு சுவருக்கு உட்பட்ட பாராளுமன்ற அமைப்புக்கு இக்கொள்கைகள் முதுகெலும்பு போல் அமைந்திருக்கின்றது. இது ஐக்கியதேசியக் கட்சியினர் 5 வருடகால கேடுகெட்ட ஆட்சிக்கு உதவி உள்ளது.

இக்கொள்கைகளை ஏற்கின்ற ஐக்கியதேசியக்கட்சி அல்லாத பங்காளக் குற்றவாளிகள் பெரும்பான்மை பாராளுமன்றத்தின் ஸ்தானங்களைப் பெறுவதினுல் எவ்வாறு பிரச்னை தீர்க்க முடியும் எனக் கூறட்டும்.

### புரட்சியே ஒரே வழி

ஏகாதிபத்திய, பிரபுத்துவ இயக்கங்களைக் களைந்தெறியும் புரட்சியே இதற்கு ஒரேஒருவழி அரசாங்க அமைப்புமுறை மாறி தொழிலாளர் அரசாங்கம் தோன்ற வேண்டும். புரட்சி

ஐக்கிய முன்னணியை தொழிலாளர் ஒன்று சேர்ந்து அமைப்பதே எமது நோக்கம்.

தொழிலாளர், விவசாயிகள், முற்போக்குவாதிகள், மார்க்ஸிய, லெனிஸிய-மாஓ தத்துவத்தின் அடிப்படையில் வழிநடாத்தும் தொழிலாளர் இயக்கத்தை நாம் கட்டி எழுப்புவதே எமக்கு உள்ள ஒரேஒரு வழி ஆகும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## துன்னலை கி.மு.ச.

பருத்தித்துறை, வியா

துன்னலை தெற்கு கிராம முன்னேற்றச் சங்க ஆண்டு விழாவின்போது புத்தாண்டு உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திரு. சி. வி. பொன்னையாக செயளாலர் திரு. கே. எஸ். சிதம்பரநாதன் தனதிகாரி திரு என். கைலாயர். 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

# பனைமரத்தில் அறிவிழந்தவர் தொட்டில் மூலம் கீழேவந்தார்

## ஆஸ்பத்திரியில் மரணம்

பூநகரி, வியாழன்

பனைமரத்தின் வட்டில் அறிவிழந்த நிலையில் மயங்கியபடி காணப்பட்ட சீவல் தொழிலாளி ஒருவர் குழந்தையைத் தாலாட்டும் தொட்டிலின் உதவியுடன் கீழே கொண்டுவரப்பட்டார்.

பூநகரியைச் சேர்ந்த அத்தாயில் நடைபெற்ற இச்சம்பவம் சம்பந்தமாகக் கூறப்படுவதாவது:

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சீவல் தொழிலாளியான சின்னத்தம்பி (வயது 45). இவர் கள்ளுச் சீவுவதற்காகப் பனை மரத்தில் ஏறியதாகவும், 3 மணி நேரமாகக் காணுத இவரை உறவினர்கள் தேடிச் சென்றதாகவும், அப்போது மரத்தின் வட்டைக் கட்டிப் பிடித்தபடி மட்டைகளின் நடுவில் இவர் கிடக்கக் காணப்பட்டதாகவும் தெரிகிறது.

தொட்டிலின் உதவியுடன் கீழே கொண்டுசெல்லப்பட்ட சின்னத்தம்பி உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் காலமானுர். அறிவிழந்ததற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

0 0 0

# இ. போ. ச. ஊழியர்களின் லீவு ரத்து

## தபால்மூலம் வாக்களிக்கவேண்டும்

கோட்டை, வியா

தேர்தல் தினத்தன்று பஸ் சேவை முறிவுபடாதுதொடர்ச்சியாக நடைபெறும் பொருட்டு இலங்கைப் போக்குவரத்து சபை தனது ஊழியர்களை யாவற்றையும் தபால் மூலம் வாக்களிக்குமாறு கேட்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று இ. போ. ச. ஊழியர்கள் எடுத்த 'லீவு' யாவற்றையும் இ. போ ச. பொதுமுகாமையாளர் ரத்து செய்துள்ளார்.

எனினும் சில ஊழியர்கள் தேர்தல் தினத்தன்று தங்கள் வாக்குகளை நேரடியாக அளிப்பதற்கு 4மணித்தியாலய லீவு கேட்கக் கூடும் என இ. போ. ச. அதிகாரிகள் கருதுகிருர்கள் தபால் மூலம் இ. போ. ச. ஊழியர்கள் வாக்களிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளதால், இதற்கு எவ்வித நடவடிக்கை எடுப்பதென ஊழியர்கள் ஆராய்கின்றனர். 4 மணித்தியால லீவு வழங்கப்பட்டால் தேர்தல் தினத்தன்று பஸ் சேவை பெரிதும் பாதிக்கப்படும் என்று இ. போ. ச. மேலிடம் கருதுகிறது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வழமையிலும் பார்க்கக் கூடிய பஸ் சேவை அளிக்க இ. போ. ச. முடிவு செய்துள்ளது.

### யாருடையது?

மருதனுமடம் ரோட்டில் திறப்புக்கோர்வை ஒன்றைக் கண்டெடுத்து அதனை ஈழநாடு காரியாலயத்தில் திரு ஆ. பொன்னம்பலம் என்பவர் ஒப்படைத்திருக்கிருர். உரிமையாளர் அதனை ஈழநாடு காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் கந்தையா

மயிலிட்டி தெற்கு வாசியும் வருமானவரி இலாகாவில்பிரதம லிகிதராககடமையாற்றி ஓய்வுபெற்றவரானதிரு. பொன்னம்பலம் கந்தையா காலமாகிவிட்டார். இவர் திருமதி சின்னுச்சியின் அன்புக் கணவரும் திரு பொ. இராசரத்தினத்தின் தமையனும், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஜெனரல் மனேஜர் கலாநிதி வி. பேரம்பலம் டாக்டர் வி. இராஜநாயகம் (FRCS கொழும்பு) திருமதி செல்லம்மா சிவகுரு, திருமதி இராஜம்மா சிவஞானலிங்கம் திருமதி முத்தம்மா தருமலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவர். அன்னாரது பூதவுடல் இன்று பிற்பகல் பழனிவாசா என்னும் அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரிகைக்காக மயிலிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும். அறிவிப்பவர்: திருமதி சின்னுச்சி கந்தையா.

2107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org